இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 10 | திகதி : 12.07.2020 | விலை : 30.00

## நூற்றுக்கணக்கான உறவுகளின் கண்ணீர் மழையில் நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத் தாக்குதலில் பலியானோரின் 25ஆவது ஆண்டு நிறைவுநாள்







- “மனுக்குலத்தின் விடுதலையை கல்வாரிப் பலியில் நினைவு கூர்ந்து, இங்கு பலியானோருக்காகச் செபிப்பது பொருத்தமானதாகும்”குருமுதல்வர்
- “அரசின் படுகொலைகள் மறக்கமுடியாதவை, நீதிக்கும் உண்மைக்கும் குரல்கொடுக்க முன்வருவோம்” - அருட்பணி எஸ். ஜே. இம்மானுவேல்
- “உயிர்களை இழந்த குடும்பத்தினர்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்” - அருட்பணி. எஸ். மங்களராஜா

25 ஆண்டுகளுக்கு முன்னர் 09.07.1995 அன்று நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் விமானக் குண்டுத்தாக்குதலில் இறந்துபோன 147 அப்பாவி மக்களின் மறைவின் 25ஆம் ஆண்டு நினைவு நாள் அவ் ஆலயத்தில் நினைவுகூரப்பட்டது. ஆலயப்பங்குத்தந்தை அருட்பணி அலின் கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையேற்று இரங்கற் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலியின் நிறைவில் இறந்தவர்களுக்காக ஒருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, இறந்தவர்களின் உறவுகள் ஒளியேற்றி மலர்களால் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து பங்குத்தந்தை அருட்பணி அலின் அடிகளாரின் தலைமையில் இரங்கல் உரைகளை அருட்பணியாளர்கள் எஸ்.ஜே. இம்மானுவேல், அருட்செல்வன், மங்களராஜா அடிகளார்கள் நடாத்தினார்கள். மண்ணின் மைந்தன் அருட்பணி அருட்செல்வன் அடிகளார் குண்டு வீசிய நாளின் துயரமான அனுபவத்தைப் பகிர ஏனைய அருட்தந்தையர்கள் மேற்கூறிப்பிட்ட விடயங்களைக் கூறி நின்றனர். இறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கற்கள் நினைவுத்தூபியில் இவ் வாண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. தொடர்ந்து இறந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுதூபியில் மக்கள் அஞ்சலி செலுத்தினர். இந் நிகழ்வுகளைக் கண்காணிக்க பொலிஸார் பாதுகாப்புக் கடைமையில் இருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மரியன்னை பேராலயத்தில் நற்கருணைச் சிற்றாலயம் திறந்துவைப்பு

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் அழகிய தோற்றத்துடன் புனரமைக்கப்பட்ட நற்கருணைச் சிற்றாலயம் 08.07.2020 புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்துவைக் கப்பட்டது.

இந்நற்கருணைச் சிற்றாலயம், பேராலயப் பங்குத்தந்தை அருட்திரு R.C.X. நேசராஜா அடிகளின் மேற்பார்வையில் பிரிகேடியர் அன்ரனி ரட்ணராஜ் டேவிட் மற்றும் அவரது மனைவி பேர்ளி டேவிட் ஆகியோரது நிதி அனுசரணையுடன் புனர்நிர்மானம் செய்யப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





## பண்டத்தரிப்புப் பிரதான வீதியில் குழந்தை இயேசு திருச்சுருபம்





பண்டத்தரிப்புப் பங்கில் அமையப்பெற்றுள்ள குழந்தை இயேசுவின் சிற்றாலயத்தின் பிரதான வீதி நுழைவாயிலில் ஓர் குழந்தை இயேசுவின் திருச்சுருபம் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்புப் பிரதான வீதியில் அமைந்துள்ள இக் குழந்தை இயேசு சிற்றாலயத்தை அமைப்பதற்கு வேண்டிய நிலப்பரப்பை பண்டத்தரிப்பை சொந்த இடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு. யோசப் டிலிப் சிறில்-கிருஷாந்தி தம்பதியினர் யாழ் மறைமாவட்டத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட் - 19 நிவாரணப்பணி



யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்ற கொவிட் - 19 நிவாரணப்பணி செயற் திட்டத்தின் கீழ் 01.06.2020 அன்று யாழ் போதனா வைத்தியசாலைப் பாவனைக்காக இயக்குனர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரினால் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்களிடம் சுகாதாரத் தொற்று நீக்கி திரவம், முகக்கவசங்கள், தனிப்பட்ட பாதுகாப்பு உடைகள், சுகாதார விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள் கையளிக்கப்பட்டது.

## ஒக்டோபர் 4ஆம் திகதி திருத்தந்தை தினம்

இவ்வாண்டு யூன் மாதம் 21ம் திகதி நினைவுகூரப்படவிருந்த திருத்தந்தை தினம் கொவிட்-19 நிலமை காரணமாக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 04ம் திகதி நினைவுகூரப்படுமென வத்திக்கான் அறிவித்துள்ளது.

அந் நாளில் எம் திருத்தந்தை பிரான்சிஸ்க்காக மன்றாட இறைமக்கள் வேண்டப்படுகின்றனர்.

## யூலை 26இல் சுதேச குருக்கள் தினம்

இவ்வாண்டு திட்டமிட்டபடி சுதேச குருக்கள் தினம் யூலை 26ம் திகதி நினைவுகூரப்படுமென வத்திக்கான் அறிவித்துள்ளது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## நவாலி தேவாலயப் படுகொலையும், இனவிடுதலைக் கோரிக்கையும்

இனநெருக்கடி ஆரம்பித்த காலம் முதல் தமிழ் இனப் படுகொலைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது என்பதை ஆதாரங்களோடு சுட்டிக்காட்டியுள்ள நிலையிலும் இதுவரை தீர்வு எதுவும் முன்வைப்படவில்லை. தீர்வு என்பது இரண்டு வகை: ஒன்று அரசியல் தீர்வு, மற்றையது போரின் பக்கவிளைவு களுக்கான தீர்வு. ஆனால் இந்த இரண்டு தீர்வுகள் பற்றியும் பதவிக்கு வருகின்ற அரசாங்கங்கள் அக்கறை செலுத்தியதாக இல்லை. இவ்வாறான சூழலில் நவாலித் தேவாலயத்தில் இடம்பெற்ற படுகொலையின் 25ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகளை மக்கள் உணர்ச்சிபூர்வமாகவும் அறிவுபூர்வமாக வும் அனுஷ்டித்துள்ளனர்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான கொலை கள் ஏராளம். போராளிகள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு பொது மக்கள் மீது தாக்குதல் நடந்தது என்பது ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சியில் தொடங்கி மகிந்த ராஜபக்ச ஆட்சிவரை நீடித்தது. நெடுந்தீவுக் குமுதினிப்படுகொலை, குரு நகர் மீனவர்கள் படுகொலை, நாகர்கோவில் படுகொலை, நாச்சிக்குடாப் படுகொலை, அனலைதீவுப் படுகொலை, உள்ளிட்ட படுகொலைகள் இன்று வரை தீராத வடுக்களாகவேயுள்ளன.

ஈழத்தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் தமிழ் கிறிஸ்தவ மக்களின் பங்களிப்பு மிகவும் பெரியது. 1982 ஆம் ஆண்டு அருட்தந்தை சிங்கராயர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்து சித்திரவதை செய்யப்பட்டது முதல் பல அருட்தந்தையர்கள் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கும் அதிகமான தேவாலயங்கள் குண்டுத் தாக்குத லுக்கு இலக்காகிச் சேதமடைந்தன. தேவாலங்களில் தஞ்சமடைந் திருந்த மக்கள் பலர் கொல்லப்பட்டனர். இவை வரலாறு.

ஆனால் இந்தப் படுகொலை வரலாற்றைத் தொடர்ந்து கொண்டுபோகவே இலங்கை அரசாங்கம் விரும்புகின்றதா என்ற கேள்விகள் எழாமலில்லை. ஏனெனில் அரசியல் தீர்வு என்பதைவிட போரின் பக்கவிளைவுகளுக்கான தீர்வுகளைக் கூட இதுவரை ஒழுங்கான முறையில் முன்வைக்கவில்லை. அதுவும் போரில் கொல்லப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. அவ்வாறு நிவாரணங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை போதுமானதாக இல்லை.

குறிப்பாக நவாலித் தேவாலயத்தில் கொல்லப்பட்ட 147 பொது மக்களின் உறவினர்களுக்கு மரணச் செலவுகளுக்காக 15 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் வேறு இழப்பீடுகள் எதுவுமே வழங்கப்படவில்லை. காயமடைந்த நூற் றுக்கும் அதிகமான மக்களில் பலர் இன்றுவரை அங்கவீனர்க ளாகவே இருக்கின்றனர். சந்திரிகாவின் ஆட்சியில் இடம்பெற்ற படுகொலை என்று கூறினாலும், அதற்கான பொறுப்பு இலங்கை அரசையேசாரும். ஏனெனில் இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு, கொழும்பை மையமாகக் கொண்ட அதிகாரத்து டனேயே செயற்பட்டு வருகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலேயே அதிகாரப் பங்கீடுகள் வழங்கப்பட்டிருந்தால் இவ்வாறான தமிழ் இனப்படு கொலைகள் நடத்திருக்காது. ஆனால் சிங்கள அரசியல் தலைவர்கள் அதனை ஏற்பதாக இல்லை. 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் இன்று ஒரு தசாப்தகாலம் சென்றுவிட்ட பின்னரும் கூட இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை. முன்னொருகாலத்தில் விடுதலைக்காகப் போராடிய இயக்கங்கள் மீதும் அதன் பின்னர் விடுதலைப் புலிகள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டன. இலங்கை அரசாங்கம் அவர்களைப் பயங்கரவாதிகள் என்றுவேறு கூறியிருந்தது. சர்வதேச நாடுகளும் அதனை நம்பி விடுதலைப் புலிகளுக்குத் தடைவிதித்திருந்தது. பயங்கரவாத இயக்கமாகவும் அறிவித்திருந்தன. 2009 ஆம் ஆண்டு மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் இலங்கை அர சாங்கம் வடக்குக் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் மேற் கொண்டுவரும் இன அழிப்பு நடவடிக்கைகள் சாதாரண தமிழ் மக்களை ஆத்திரமடையச் செய்கின்றன.

படுகொலை மாத்திரம் இன அழிப்பு அல்ல. கலாசாரம், பண்பாடு, மரபுரிமை. காணி அபகரிப்பு, தொல்பொருள் சின் னங்கள் ஆகியவற்றை அழிப்பதும் அவற்றின் அடையாளங் களை மாற்றியமைப்பதும் இனப்படுகொலைதான். ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் ஒரு இனத்தின் மரபுரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது குறித்து விளக்கமளிக்கப் பட்டுள்ளது.

ஆகவே வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அரசியலில் ஈடுபடும் கட்சிகள் சாதாரண கட்சி அரசியல் செயற்பாடுகளைக் கைவிட்டு, தேசம் என்பதை நிறுவுவதற்கான மக்கள் இயக்கமாகவும், தேசிய அமைப்பாகவும், ஒருமித்துச் செயற்படக் கூடிய திட்டங்களை வகுக்க வேண்டும். இது நவாலித் தேவாலயப்படுகொலையின் 25ம் ஆண்டு நினைவின் மாற்றுச் சிந்தனையாக அமையட்டும்.

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# அருட்பணி ஜார்ஜ் இரட்சிங்கர் மறைவுக்கு திருத்தந்தை அனுதாபம்

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் மூத்த சகோதரர், அருட்பணி ஜார்ஜ் இரட்சிங்கர் அவர்களின் மறைவைக் குறித்து தன் ஆழ்ந்த அனுதாபத்தையும், செபங்களையும் தெரிவித்து, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மடல் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தங்கள் அன்புக்குரிய சகோதரரின் மரணம் குறித்த துயரமான செய்தியை, அனைவருக்கும் முன்னதாகத் தனக்குத் தெரி வித்ததற்காக நன்றி என்று தன் மடலை துவக்கியுள்ள திருத்தந்தை, முன்னாள் திருத் தந்தையின் ஆழ்ந்த வேதனையில் தானும் ஆன்மீக வழியில் ஒன்றித்திருப்பதாகக் கூறியுள்ளார்.

தங்கள் சகோதரரை இறைவன் வாக்களிக்கப்பட்ட இல்லத்திற்கு அழைத்துச் செல்லவும், வாழ்நாளெல்லாம் பிரமாணிக்க மாக இறைவனுக்குப் பணியாற்றிய அந்த ஊழியனுக்குரிய பரிசை இறைவன் அவருக்கு வழங்கும்படியாகவும் தான் செபிப்பதாகத் திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள் இம்மடலில் குறிப்பிட்டுள்ளார்.

அன்னை மரியாவின் பரிந்துரையால், தாங்கள் இறைவனின் ஆறுதலை பெறுவ தற்கு தந்தையிடம் தான் செபிப்பதாகக் கூறித் தன் மடலை நிறைவு செய்துள்ளார்.

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் மூத்த சகோதரர், அருட்பணி ஜார்ஜ் இரட்சிங்கர் (George Ratzinger) அவர்கள் ஜுலை1, தன் 96வது வயதில் ஜெர்மன் நாட்டின் Regensburg நகரில் இறையடி சேர்ந்தார்.

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், நோயுற்றிருக்கும் தன் மூத்த சகோதரரைக் காண, ஜூன் 18ம் திகதி Regensburg நகருக்குச் சென்று அவருடன் நான்கு நாட்கள் தங்கி விட்டு ஜூன் 22ம் திகதி மீண்டும் வத்திக்கானுக்குத் திரும்பி னார்.

# தன் மின்சக்தி சைக்கிளை ஏலத்தில் விட்ட திருத்தந்தை

உரோம் நகரிலுள்ள ஜெமெல்லி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவரும் குழந்தைகள், லூர்து நகர் அன்னை மரியா திருத்தலத் திற்கு திருப்பயணம் செல்வதற்கு உதவியாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனக்குப் பரிசாக வழங்கப்பட்ட மின்சக்தி சைக்கிள் ஒன்றை ஏலத்தில் விட்டு நிதிதிரட்டுவதற்கு, UNITALSI என்ற பிறரன்பு அமைப் பிடம் வழங்கியுள்ளார்.

நோயுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளி களை லூர்து நகர் அன்னை மரியா திருத் தலத்திற்கு அழைத்துச் செல்லும் பிறரன்பு அமைப்பான UNITALSI யின் இணையத் தளத்தில், திருத்தந்தை வழங்கிய சைக்கிள் குறித்த விவரங்களும், அதை ஏலத்தில் பெறு வதற்கு உரிய வழிகளும் கூறப்பட்டுள் ளன.

வருகிற ஆகஸ்ட் மாதத்தில் லூர்து நகர் அன்னை மரியா திருத்தலத்திற்கு மீண்டும் திருப்பயணங்கள் துவங்கும் வாய்ப்புக்கள் இருப்பதால், அவ்வேளையில், ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளை அங்கு அழைத்துச் செல் லும் முயற்சிகளை UNITALSI யின் உரோம் கிளை மேற்கொண்டு வருகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் குழந்தைகள் மீது, குறிப்பாக, நோயுற்ற குழந்தைகள் மீது கொண்டுள்ள பாசத்தை அனைவரும் அறிவோம், அந்தப் பாசத்தின் ஒரு வெளிப்பாடாக திருத்தந்தை தங்களுக்கு வழங்கியுள்ள இந்த மின்சக்தி சைக்கிள் அமைத்துள்ளது என்று UNITALSI அமைப் பின் உரோம் கிளையின் தலைவர் Preziosa Terrinoni அவர்கள் கூறியுள்ளார்.

மேலும் UNITALSI அமைப்பில் பணியாற் றும் தன்னார்வத் தொண்டர்களான இளை-யோரை, திருத்தந்தை எப்போதும் ஊக்குவித்து வருகிறார் என்று, இவ்வமைப்பின் ஆன்மீக வழிகாட்டி அருட்பணி Gianni Toni அவர்கள் கூறியுள்ளார்.

# கோவிட்-19: WFP அமைப்புக்கு திருத்தந்தை உதவி

கோவிட்-19 கொள்ளைநோய் உருவாக்கியிருக் கும் நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவாக, உலக உணவுத் திட்ட அமைப்பு ஆற்றிவரும் நடவடிக்கைகளை ஊக்கப்படுத் தும் விதமாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர் கள் 25,000 யூரோக்களை அந்த அமைப் புக்கு வழங்கியுள்ளார்.

திருத்தந்தை வழங்கியுள்ள இந்த நன்கொடை பற்றி அறிக்கை வெளியிட்ட, ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத் திருப்பீட அவை, இத்தகைய செயல்கள் வழியாகத் திருத் தந்தை பிரான்சிஸ் அவர்கள், கொரோனா தொற்றுக்கிருமியின் பாதிப்புக்களால் துன்புறு வோர் மற்றும் ஏழைகளுக்கு ஆதரவாகப் பணியாற்றுகின்றவர்களுடன் தனது அரு காமையைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வரு கிறார் என்று கூறியுள்ளது.

இந்த நன்கொடை, ஐ.நா.வின் உணவு மற்றும், வேளாண்மை அமைப்பு (FAO), வேளாண் வளர்ச்சிக்கு பன்னாட்டு நிதி அமைப்பு (IFAD) மற்றும் உலக உணவு திட்ட அமைப்பு (WFP) ஆகிய நிறுவனங்களில் பணியாற்றும் திருப்பீடத்தின் பிரதிநிதியின் ஒத்துழைப்போடு ஒருங்கிணைந்த மனித முன் னேற்றத் திருப்பீட அவை வழியாக வழங் கப்பட்டுள்ளது.

சமுதாய நிலையற்றதன்மை, உணவுப் பாதுகாப்பின்மை, வளர்ந்துவரும் வேலை வாய்ப்பின்மை, வறிய நாடுகளின் வீழ்ச்சி யடைந்துள்ள பொருளாதார அமைப்புகள் போன்றவற்றைக் களைவதற்கென WFP அமைப்பும், மற்ற நாடுகளும், மக்களின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கு ஆதர வாய்ச் செயற்படுவதை, தந்தைக்குரிய அன் பால் ஊக்கப்படுத்தும் ஓர் அடையாளமாகத் திருத்தந்தையின் நன்கொடை வழங்கப்பட் டுள்ளது என்று, அந்த அறிக்கை கூறுகிறது.

கோவிட்-19 கொள்ளைநோயை ஒழிக்கும் முகமாக இந்நோய் கடுமையாய்ப் பாதிக்கப் பட்டுள்ள நாடுகளுக்கு, குறிப்பாக, ஏழை நாடுகளுக்கு, அண்மையில் 35 வென்டி லேட்டர்களை அனுப்பியுள்ளார். அதோடு, ஏறத்தாழ 20 இலட்சம் யூரோக்கள் பணத் தையும், திருத்தந்தை வெவ்வேறு நாடுக ளுக்கு அளித்துள்ளார்.

## சின்னமடு மாதா திருத்தலத்தில் ஆராதனை

சின்னமடு மாதா திருத்தலத்தில் ஒவ்வொரு மாதமும் முதல்வரும் சனிக்கிழமைகளில் காலை 8.00 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்து மக்களின் ஆராதனைக்காக வைக்கப்பட்டு, மாலை 5.00 மணிக்கு வழிபாட்டுடன் நற்கருணை ஆசீர் இடம்பெறும். மக்கள் அனைவரும் இத்திருவழி பாட்டில் கலந்து இறை ஆசீரையும் அன்னை யின் பரிந்துரையையும், பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

# காவலன் கலசம்

# நவாலியில் ஓர் துயரம்

யூலை மாதத்திற்கு வரலாற்றில் அப்படியொரு மனித இரத்தக்கறை! அதை மீண்டும் நிரூபித்துள்ளது நவாலிப் படுகொலை இராணுவத்தின் முன்னேற்றத்தின்போது அவர்கள் கையில் அகப்படாது தப்பிக்க வலிகாம மக்கள் கையில் கிடைத்த மூட்டை முடிச்சுக்களுடன் இடம் பெயரத் தொடங்கி, யாழ் நகரை நோக்கி வட்டுக் கோட்டை நவாலி வீதியில் பயணித்த போதுதான் கற்பனைக் கெட்டாத துயர நிகழ்வு நடந்தேறியது.

**கோவில்கள்**

நவாலிக் கிராமத்தைப் பொறுத்தவரையில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் சகோதர மதம் என்பதில் நம்பிக்கையுடன் கூடிய மதிப்பைக் கொண்டு நல்லுறவுடன் வாழும் ஒரு சமூகம் இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு நவாலி சம்பேதுரு பாவிலு ஆலயமும் அருகிலுள்ள முருகன் கோவிலும் கதவுகளைத் திறந்தன.

இளையோர், தன்னார்வ நலன்விரும்பிகள், பொதுமக்களெனப் பலர் ஒன்று சேர்ந்து இளைத்துக் களைத்து வந்தோர்க்கு உணவு, பானம் வழங்குவதில் பரபரப்பாயினர். கோவில்களும், பாடசாலை மண்டபங்களும், வளாகமும் பல்வேறு கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களால் நிறைந்து வழிந்தோடிக்கொண்டிருந்தது. கோவில்கள், புனித ஸ்தலங்கள் அவற்றின் மீது தாக்குதல் நடாத்தமாட்டார்கள் என்ற எண்ணம் அடைக்கலம் தேடி அங்கு வந்தவர்களின் அடிமனதை வருடியிருந்ததும், அம்மக்கள் அவ்விடங்களைத் தேர்வு செய்ததற்கு ஒரு காரணம்.

**பேரிடி**

வானில் தோன்றிய சிறிலங்கா விமானப் படையின் போர் விமானம் மேற்குறிப்பிட்ட கோவில்கள் மீதும் அண்டிய குடியிருப்புக்கள் மீதும் குண்டுகளை வீசின. கிராமமே அதிர்ந்து போகும் பேரிடியுடன் அவை வெடித்துச் சிதறின. நூற்றுக்கணக்கான உயிர்கள் உடல் சிதறிப் பலியாயினர். பலர் இன்று வரை அடையாளம் காணப்படவில்லை. நூற்றுக்கு மேற்பட்டோர் காயமுற்றும், அங்கங்களை இழந்தும் எங்கோ ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சிதைந்து போன கோயில்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. தரைமட்டமான வீடுகள் மீண்டும் அதே மக்களின் உழைப்பினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன. குண்டுகள் விழுந்த குழிகள் மூடப்பட்டுள்ளன. ஆனால் இழப்புக்களைச் சந்தித்தோரின் மனங்கள்....?

**25 ஆண்டு நிறைவு**

நவாலி பேரவலம் நடந்து இவ்வாண்டு கால் நூற்றாண்டை இக் கிராமம் சந்திக்கிறது. இவ் நீண்ட ஆண்டுப் பெருவெளியில் இக் கொலைகளுக்குக் காரணமானவர்கள் சர்வ சாதாரணமாக இச் சம்பவத்தைக் கடந்து சென்றுள்ளனர். என்பதுதான் உண்மை. ஒவ்வொரு ஆண்டும் இந்தத் திகதியில் நவாலி சம்பேதுரு பாவிலு ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, கொல்லப்பட்டவர்களின் உறவுகள் அன்றைய தினம் புகைப்படங்களுடனும், மலர் மாலைகளுடனும், எரி யும் மெழுகுவர்த்திகளுடனும் நினைவேந்தலைச் செய்து வந்தனர். அப்போதெல்லாம் புலனாய்வாளர்களின் நெருக்கடிகள் தொடர்ந்திருந்தபோதும் பெருந்திரளாய்க் கூடி உறவுகளின் ஆன்ம சாந்திக்காய் பிரார்த்தனை செய்து வந்தனர். 25 வது ஆண்டு நிறைவில் கூட இந் நினைவேந்தலைச் செய்யவிடாது பல தடைகள், நெருக்குவாரங்களைக் கொடுத்து பாதிக்கப்பட்ட மக்களின் வேதனையில் எண்ணெய் ஊற்றும் நிகழ்வுதான் தொடர்ந்தும் நடைபெறுகின்றது. தடைகளும், அச்சுறுத்தல்களும் தொடரும் வரை மேலும் மேலும் உணர்வெழுச்சிகள் தூண்டப்படுவதைத் தடுக்க முடியாது என்பதுதான் உண்மை. இறந்தவர்களை இயல்பாக நினைவுகூரும் ஜனநாயக சூழல் எமக்கு வேண்டும் என்பதே எல்லோருடைய ஒட்டுமொத்தப் பிரார்த்தனையாக உள்ளது.

**அருட்பணி எஸ்.ஏ.அருட்செல்வன்**

## முடிவிலியாய் தொடர்கிறதே...



கோவில் மணிக்கறையே
கொஞ்சம் ஈரம் கொள்
சாவில் மலர்ந்த பூவே
இனியும் வாசம் செய்

பேரிடி பெருகிவந்த பெருந்துயர் காற்றே
கண்ணை மூடித் திறக்கு முன்னே
கலகம் செய்து கருவறுத்துப் போனாய்
இருபத்தைந்தாண்டு ஒடிமறைந்ததே
சிதைவுகளை மறப்போமா
சிதைநெருப்பைச் சகிப்போமா

நவாலி சம்பேதுரு பாவிலு ஆலயம்
இனிமைமிகு பிரார்த்தனைகளின் கூடாரம்
ஆறுதல் தேடி வருவோர்க்கு அன்னையான ஆலயம்
குண்டு வீழ்ந்து குரலற்றுப்போன இந்நாளில்
குருதி உறையும் தாகமெடுத்து வருகிறோம்

அடைக்கலம் தேடி ஆலயம் வந்தவர்கள்
அவர்கட்கு உதவிட ஆவன செய்தவர்கள்
ஆயிரம் பிரார்த்தனை கலந்த இவ்வெளியில்
சிதைந்து போயினர் தீராத துயர்விட்டு
நெஞ்சை அடைக்கும் வலியுடன் நிற்கிறோம்
தேற்றவியலா சுமையுடன் அழுகிறோம்

அன்றுதொட்டு இன்று வரை
எம்மினமே கொலைகளுக்கு இரை
வேடிக்கை பார்க்குது மேற்குலக மனச்சாட்சி
வாடிக்கையான துரோகத் தழும்புகளுடன்
முடிவிலியாய் தொடரும் கொலைநினைவு நாட்களுக்கு

**அருட்பணி எஸ்.ஏ.அருட்செல்வன்**

# வலி ஆறா நினைவுகளுடன் நவாலியில்...

நேற்றைய பொழுது எம் இதயம் கனத்த நாள், நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயத்தின் மீது விமானங்கள் குண்டு மழை பொழிந்து 25 ஆண்டுகளின் நிறைவை நினைவுபடுத்திய நாள். எம் இளையோர் அறியாக் கதைகள் இவை. பகிர்கின்றேன் அவர்களுக்காக...

09.07.1995 அன்று ஓர் ஞாயிற்றுக்கிழமை. நான் அன்று ஓர் குருமட மாணவனாகக் கொழும்புத்துறை குருமடத்தில் கல்வி பயின்றுகொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்தைப் போர் சூழ்ந்தவேளை, மக்கள் பீதியில் சொந்த வீடுகளை விட்டு இடம்பெயரும் நாட்கள். குருமட அதிபர் குடும்பத்தாரை சந்தித்து வர குருமட மாணவர்களுக்கு அனுமதி வழங்கினார்.

நானும் சகோதரன் அருட்செல்வனும் கூடவே சில அருட்சகோதரர்களும் மானிப்பாய் வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது வானத்தில் புறாக்கள் போல விமானங்கள் பறந்து வந்து வட்டமிட்டு குண்டு மழை பொழிந்தன. பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்கள் எம்மை நிலை குலைய வைத்தன. சில நிமிடங்கள் பாதுகாப்பிற்காக ஒதுங்கி நின்ற நாம், மீண்டும் பயணித்தோம். நாம் ஆனைக் கோட்டை சந்தியை அண்மிக்க, வீதியில் பலரை இரத்தம் சொட்டச் சொட்ட அங்கங்கள் இழந்த நிலையில் காவிக்கொண்டு மோட்டார் சைக்கிள்கள் விரைந்தன யாழ் போதனா வைத்தியசாலையை நோக்கி... **"நவாலி சேர்சில்" "ஓடுங்கோ!"** என கத்திக்கொண்டு சென்றன மோட்டார் சைக்கிள்கள். நாமும் விரைந்தோம் நவாலி நோக்கி...

மூத்த விநாயகர் ஆலய சந்தியில் நாம் வழி மறிக்கப்படுகின்றோம். மீட்புப் பணிக்காகவும், பாதுகாப்பின்மை காரணமாகவும் செல்ல முடியாது என எமக்கு சொல்லப்பட நாம் யாழ் போதனா வைத்தியசாலை நோக்கி திரும்ப சகோதரன் அருட்செல்வன் ஒருவாறு நவாலி நோக்கிச் சென்று விடுகிறார். அந்த கொடூரக் காட்சியைத் தன் கண்ணால் காண்பதற்காக..

இந் நினைவுகள் என் மனதில் இழையோட 25 ஆண்டுகளைக் கடந்த நிலையில் நவாலி ஆலய வளாகத்தில் நேற்றைய தினம் (09.07.2020) நான் சந்தித்தவர்களின் வேதனையுணர்வுகளைப் **"பாதுகாவலன்"** நேயர்களுக்காகத் தொடர்ந்து பதிவு செய்கின்றேன்.

**"என்ர புள்ள தான் என்ன பார்க்கும் எண்டு இருந்தன். என் கணவரும் அகால மரணமாயிட்டார். என்ர ஒரே பெண் பிள்ளை! பாதர், என் வயிறு பத்தி எரியுது" - அன்ரனி குரூஸ் கமலா**

இந்தத்தாய் தன் 18 வயது நிரம்பிய ஒரே மகள் குமுதினியை இழந்து பரிதவிக்கிறார். இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் அவருக்கு 43 வயதாகியிருக்கும். அவர் வயதுப் பிள்ளைகளைப் பார்க்கும் போதெல்லாம் தன் பிள்ளையின் ஞாபகம் தான் வருகிறது என கதறி அழுகிறார் 25 ஆண்டுகளைக் கடந்தும் இத்தாயானவள்...

**அருட்பணி. எஸ்.ஏ.றொஷான்**

**"நாம் வின்சென் டிபோல் சபையால் கோவிலில் தஞ்சம் புகுந்தோர்க்காய் சமைத்துக் கொண்டிருந்தோம். பிள்ளையும் என் கூட இருந்து விட்டு முன் வீட்டுக்குப் போன வேளையில் தான் இவ் அனர்த்தம் நடைபெற்றது. சம்பவம் மாலை 4.47 மணிக்கு நடைபெற்றது. ஆனால் மாலை 6.00 மணிக்குத்தான் பிள்ளை தென்னம்பிள்ளைக்கு கீழ் பிணமாகக் கிடக்கிறாள் எனக் கணவர் கத்திக்கொண்டு வந்து சொன்னார்"** என தொடர்ந்தார் விம்மிய குரலுடன் அத்தாயானவள்.

**"என்ர இரண்டு குஞ்சுகளும் இறந்த செய்தி 15 நாட்களுக்குப் பின் தான் எனக்குத் தெரியும். நானும் காயப்பட்டு போதனா வைத்தியசாலையில்,என்ர புள்ளையளின்ர உடல்களை கூட பார்க்க முடியாத பாவி நான்" - தேவதாஸ் ஜெயராணி.**

நரேஸ்குமார் வயது 11 மூத்த மகன், பிறிந்தினி வயது 7 இளைய மகள் இவர்கள் இருவரையும் குண்டுக்குஇரையாக்கித் தாமும் காயமுற்று நலமடைந்தவர். அவரது வீடும் முற்றாக சேதமாக்கப்பட்டது. அரசு அவருக்கு கொடுத்தது ரூபா 15.000 மட்டுமே! **"இறைவன் என்ர கடைசிப் பிள்ளைக்கு தாயாக என்னை வாழ வைத்துள்ளார். அதற்கு நன்றி கூறுகின்றேன். என்ர மகன் குண்டுபட்டுத் துடிதுடித்த காட்சி மறக்க முடியாது"** என்றாள்.

கலங்கிய விழிகளுடன் ஓர் தம்பதியினர் சூசைதாசன் - மரியபுஸ்பம் தமது 18 வயது நிரம்பிய மூத்த மகள் மேரி சசிகலாவை இழந்து எரிகின்ற தீப ஒளிகளுடனும், கலங்கிய விழிகளுடனும் நின்றனர்.

**"என்ர புள்ள அகதிகளுக்கு சமைக்க தாயுடன் சென்றவள். உப்பு வாங்கப் போனவள் திரும்பி வரல்ல..." - சூசைதாசன்.**

சசிகலா வீதியில் வரும் போது வானத்தில் விமானங்கள் "நோட்டிஸ்" போடுகின்றன எனத் தன் நண்பிக்கு கூறியுள்ளார். இது அவளின் உயிரைக் காவு கொள்ளும் இராட்சதக் குண்டுகள் என அவள் அறிந்திருக்கவில்லை.

இவளின் அன்புத் தந்தை இன்றும் ஆலயத் திருப்பண்டக் காப்பாளராக இறை பணிபுரிகின்றார். இறைவனின் துன்பச் சிலுவையை ஏற்று மகளார் ஆண்டவரில் மறு வாழ்வு கண்டுள்ளார் என்பது அவரது நம்பிக்கை.

திருமதி ஜசிந்தா அன்ரன்அவர்களைச் சந்திக்கின்றேன். அவர் முன்னாள் ஊடகவியளாளர். இவ் அனர்த்தம் நடைபெற்ற போது கொழும்பில் வாழ்ந்தவர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ் போதனா வைத்தியசாலை ஊடாகவும், அந்நாள் பங்குத்தந்தை அமரர் அருட்பணி B பொனிபஸ் அடிகள் வழியாகவும் அனர்த்தம் சம்பந்தமான செய்திகள்,படங்கள் இறந்தோர் விபரங்களைச் சேகரித்து வெளியிட முடியாத அவல நிலையில் இருந்தவர். செய்தித் தணிக்கை காரணமாக மௌனித்து நின்றவர். இருப்பினும் சர்வதேசத்துக்கு முடிந்த அளவு செய்திகளை பரிமாறியவர். **"நீறு பூத்த தணலாக வாழ்கின்றோம் பாதர் நாம்"** என்று தமது உள்ளத்துச் சுமைகளை ஓர் வார்த்தையில் முடித்துவிட்டார்.

இறுதியாக என் சந்திப்பு ஓய்வு நிலைக் கல்விப்பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் அவர்களுடனாகும்.

**"எங்கள் கண்ணீரை அரசியல் ஆக்காதீர்கள். எமது வலிகள் 25ஆண்டுகள் கடந்தும் ஆறவில்லை. எமது துன்பத்தில் இறைவனைத் தவிர வேறு எவரும் துயர்துடைக்கவில்லை. எனவே இவ் 25 ஆண்டு நிறைவு நாளில் அரசியல் செய்யாதீர்கள்"** எனத் தமது வேதனையை கடும் தொனியில் கூறி நின்றார்.

கல்விப்பணிப்பாளரின் இவ்வார்த்தைகளுடன் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி அலின் கருணாகரனைச் சந்தித்தேன்.

**"25 ஆண்டுகள் கடந்தாலும் இரத்தம் தோய்ந்த தமிழர் வரலாற்றில் ஓர் பக்கத்தைப் புரட்டிப் பார்த்துள்ளோம் இன்று"** என்றார். இத்தனை கனத்த செவிமடுத்தலுடன் எனது மோட்டர் சைக்கிள் என் அலுவலகம் நோக்கிப் பயணித்தது.

காவலன் கலசம்

# நவாலி தேவாலயத்தின் மீது இடம்பெற்ற கொடூர குண்டுத் தாக்குதல் குறித்து 1995 ஜூலை பாதுகாவலனிலிருந்து...

## வத்திக்கான் தூதுவருக்கு யாழ் ஆயர் வேண்டுகோள்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு 10.07.1995 அன்று எழுதிய கடிதத்தின் பிரதியொன்றைக் கொழும்பிலுள்ள வத்திக்கான் தூதுவர் மேன்மைதங்கிய பேராயர் ஒஸ்வால்டோ படில்லா அவர்களுக்கும், இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவருக்கும் அனுப்பியதைத் தொடர்ந்து 13.07.1995 இல் வத்திக்கான் தூதுவருக்கு எழுதிய கடிதத்தின் பகுதிகள் பின்வருமாறு. இராணுவம் முன்னேறி வரும் பொழுது பொதுமக்களின் மீது நடாத்திய மிகப் பெரிய அளவிலான எண்ணிக்கை தாக்குதல்களால் வலிகாமம் மேற்கு வடக்கிலிருந்து மக்கள் தங்கள் சொந்த இடங்களை விட்டு விட்டு வெளியேறினர். மக்களின் இம் மாபெரும் இடப்பெயர்வின்போது அவர்களில் சிலர் ஏறக்குறைய 2500 பேர் நவாலிக் கோவில் வளவில் அடைக்கலம் புகுந்துள்ளனர். யூலை 9ம் திகதி பிற்பகல் 4.45 மணிக்கு ஓர் புக்காரா விமானம் திடீரெனத் தோன்றி ஆறுக்கு மேற்பட்ட குண்டுகளைப் பொழிந்தது. பெரும் அதிர்வுடன் கட்டிடங்கள் நொருங்க மக்கள் அக் கணத்திலேயே கொல்லப்பட்டனர். அநேகர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களின் எண்ணிக்கை 120ஐயும் தாண்டிவிட்டது. இன்னும் சிலர் இனங்காணப்படவில்லை. இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவி புரிந்த தொண்டர் பலர். இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

பெண்கள் குழந்தைகள் உட்பட ஏறக்குறைய 220 பொதுமக்கள் இந்த "முன்னோக்கிப் பாய்ச்சல்" என்னும் இராணுவ நடவடிக்கையில் பலியாகியுள்ளனர். இப்படித் தொடருமாயின் யாழ்ப்பாண மக்கள் பயங்கர பேரிடரை எதிர்நோக்க வேண்டியிருக்கும். யாழ் நகர் இடம் பெயர்ந்த மக்களால் நிரம்பி வழிகின்றது. குடாநாட்டில் 63 பெரியதும் சிறியதுமான முகாம்களில் இவஉகள் பராமரிக்கப்படுகின்றனர். உணவு, சுகாதாரம், மருத்துவம் போன்ற வசதிகள் மிகவும் வருந்தத்தக்க நிலையில் உள்ளன.

எனவே பொதுமக்களுக்கு சொல்லொண்ணாத் துன்பத்தை உண்டு பண்ணும் இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதில் எதுவித பயனுமில்லை. சமாதான நோக்கை முன்னெடுக்க இது உதவமாட்டாது பொது மக்கள் மீதும் பாகுபாடற்ற இலக்குகள் மீதும் மேற்கொள்ளும் விமானக்குண்டு வீச்சுக்குளும் ஏகணை எறிகணைத் தாக்குதல்களும் எவ்விதப்பட்டும் நிறுத்தப்பட வேண்டும். இந்த பெரும் ஆபத்து வேளையில் மக்களின் பாதுகாப்பிற்காக உங்கள் செபங்களை தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.



பாதுகாவலன்
PATHUKAVALAN
மலர்: 121 இதழ்: 14
21—07—1995
விலை ரூபா 5·00

பாப்பரசரின் வேண்டுகோள்

கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்

நவாலி கத்தோலிக்க ஆலயத்தில் தஞ்சம் புகுந்தோர் மீது

கொடூர குண்டு பாய்ச்சல்

117 பேர் பலி — 200 க்குமேல் படுகாயம்

யாழ்ப்பாண குடாநாட்டு மக்களை விடுதலைப்புலிகளிடமிருந்து "விடுவிக்கும்" நோக்குடன் தொடங்கிய "முன்னோக்கிப் பாய்ச்சல்" எனும் சிறீலங்கா இராணுவ நடவடிக்கையின் முதல்நாள் (ஞாயிறு-09-07-95) மாலை 4-45 மணியளவில் சரமாரியான விமானக் குண்டு வீச்சினால் நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த அப்பாவி மக்களில், 65 பெண்கள், 13 குழந்தைகள் உட்பட, 117க்கு மேலானோர் கொல்லப்பட்டதுடன், 200 பேர் அளவில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

"புலியின் பிடியிலிருந்து" விடுவிக்கப்பட்டோர்!!

சின்னா பின்னமான சடலங்கள் (நவாலி ஆலய வளாகத்தில்) சின்னஞ் சிறிய பாலகர்

யாழ் ஆயர் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு 10-07-95 இல் எழுதிய கடிதம்


யாழ். கத். குருமாரின் கண்டனமும் கோரிக்கைகளும்

தென்னிந்திய திருச்சபை ஆயர் ஜெபநேசனின் அறிக்கை

ஆழ்ந்த கவலை தெரிவிக்கும் திருமலை - மட்டுநகர் ஆயர்

வத். தூதுவருக்கு யாழ் ஆயர் வேண்டுகோள்

இலங்கை கத். ஆயர் பேரவை கண்டனம்



## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை கண்டனம்

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் மேதகு வியன்னி பெர்னாண்டோ ஆண்டகை, இராணுவ நடவடிக்கையினால் நவாலி ஆலயத்தில் ஏற்பட்ட கொலைகளை வன்மையாகக் கண்டித்து வருத்தத்தைத் தெரிவித்துடன், சிறிலங்கா ஜனாதிபதியால் விசாரணைக் குழு நியமிக்கும் வாக்குறுதியை வரவேற்று அதன் செயற்பாட்டை உன்னிப்பாகக் கவனிக்கப் போவதாக ஆயர் பேரவை சார்பில் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ் ஆயர் சிறிலங்கா ஜனாதிபதிக்கு 10.07.95 இல் எழுதிய கடிதம்

மேதகையீர்,

நவாலி புனித பேதுருவானவர் கத்தோலிக்க ஆலயத்தில் ஞாயிறு, ஜூலை 9ம் நாள் ஏற்பட்ட பொது மக்கள் சாவும் சேதமும்.பின்வரும் துக்ககரமான சம்பவத்தை உங்கள் அன்பார்ந்த கவனத்திற்குக் கொண்டுவரத் தயவாய் விடைதரவும்.

உங்கள் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் படி மேற்குறிப்பிட்ட கோயிலில் கூடியிருந்த அப்பாவிப் பொதுமக்களான அகதிகளின் பரிதாபமான கொலைப் பற்றி அறிவிப்பதில் நான் மிகவும் கவலையடைகின்றேன் . கோயிலில் புகலிடமடைந்தஇந்த அகதிக் கும்பல் மேல் புக்காரா ஆகாய விமானம் ஒன்று பொழிந்த ஒரு தொகுதிக் குண்டுகள் பலவற்றால் பெண்கள் குழந்தைகள் உட்பட 65 பொது மக்கள்வு எய்தியுடன் 150 க்கு மேலானோர் ஊனமுற்று படுகாயங்களுக்குள்ளாயினர். மேலும் வீடுகள் பல தரைமட்டமாக்கப்பட்டதாலும் மற்றும் சில எமது கோயிலும் குருமனையும் உட்பட அதிக சேதத்திற்குள்ளானதாலும் நூற்றுக் கணக்கானோர் இல்லிடமற்றவர்களாக்கப் பட்டுள்ளனர்.

இவ்வூர் மக்கள் அனைவரும் அகதிகளாக பாதுகாப்பான இடங்களுக்கு தப்பியோடி விட்டனர். எனவே கோயில்கள், ஆலயங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற பொதுமக்கள் இலக்குகள் மேல் குண்டுகள் பொழிவதையும் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்வதையும் தவிர்க்கப்பட வேண்டுமென உங்கள் படையினருக்கு அறிவுறுத்தல் கொடுக்குமாறு மேன்மை தங்கிய தங்களை மிக வினயமாக வேண்டுகின்றேன்.

## யாழ். கத்தோலிக்க குருமாரின் கண்டனமும் கோரிக்கைகளும்

யாழ் மறைமாவட்ட நீதி சமாதான அணைக்குழுவின் அழைப்பின் பேரில் ஜூலை 12ம் திகதி புதன்கிழமை, யாழ் ஆயர் இல்லத்தில் யாழ் மறைமாவட்டக் குருமார் 68 பேர் ஆயர் தலைமையில் ஒன்றுகூடி 'முன்னோக்கிப் பாய்ச்சல்' எனும் இராணுவ நடவடிக்கை, விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு நிர்ப்பந்திக்கவும் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கவும் என சிறிலங்கா அரசாங்கம் எதிர்நோக்கிய குறிக்கோள்களை விட எதிர்மாறான விளைவுகளை மாத்திரம் உண்டு பண்ணியுள்ளதென ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர்.

எனவே இராணுவ நடவடிக்கையூடாக சமாதானம் அடையும் நோக்கத்தை விட்டு அரசியல் பேச்சு வார்த்தைகள் தொடங்குமாறு யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் யாழ் மறைமாவட்ட குருக்கள் ஒன்றியத்தின் தலைவர் அருட்திரு ஜஸ்ரின். ஞானப்பிரகாசம், நீதி, சமாதான ஆணைக்குழுத் தலைவர் அருட்திரு C.G.ஜெயக்குமார் ஆகிய மூவரும் கைச்சாதிட்டு சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஐந்து அம்சங்கள் அடங்கிய மகஜர் ஒன்று அனுப்பியுள்ளனர்.

ஊரடங்குச் சட்டம் இராணுவ நடவடிக்கை தொடங்கிய பின் அறிவிக்கப்பட்டதையும் கண்மூடித்தனமானஎறிகணைத்தாக்குதல்களால்குண்டுவீச்சுகளினால் 220 பொதுமக்கள் கொல்லப்பட்டதையும் 375 பொது மக்கள் பலத்த காயங்களுக்குள்ளானதையும் நவாலி ஆலயத்தில் ஒரே கணத்தில் நடந்த படுகொலைக் களரியையும் யாழ் போதனா மருத்துவ மனையில் மருந்துப் பற்றாக்குறையையும் ஏறக்குறைய 300,000 இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவு இருப்பிட வசதியின்மையையும் இம் மகஜரில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மேலும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்துமாறும் மருந்து வகைகளை அனுப்புமாறும் இடம் பெயர்ந்தோர் தங்குவதற்கு இடவசதி, உணவு, உடை வழங்குமாறும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

## நவாலி தேவாலய சம்பவம் குறித்து ஜனாதிபதிக்கு யாழ் ஆயர் 07.08.95 அன்று எழுதிய 2வது கடிதம்

நவாலி தேவாலயம் மீதான குண்டு வீச்சு சம்பவம் குறித்து நீங்கள் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக இதை நான் எழுதுகிறேன். இச்சம்பவம் குறித்து எனனிடமிருந்து பக்ஸ் செய்தியை நீங்கள் எதிர் பார்த்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

இச்சம்பவம் குறித்து நான் ஜூலை 10ம் திகதி எழுதிய கடிதத்தை மறுநாள் உங்களுக்கு அனுப்புவதற்காக அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்திடம் ஒப்படைத்தேன். இது வரை அக்கடிதம் உங்களுக்க கிடைக்கவில்லை என்பது குறித்து நான் ஆச்சரியமடைகிறேன். அதே சமயம் கடிதங்களைக் கொழும்பில் உள்ள பாப்பரசரின் பிரதிநிதிக்கும், சிறிலங்கா கத்தோலிக்க ஆயர்கள் சபைக்கும் அனுப்பினேன். இக்கடிதம் கொழும்பு பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது.

தேவாலயத்திலும் அதன் வளாகத்தினுள்ளும் தஞ்சமடைந்திருந்த பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்பதே எமது அக்கறை. தேவாலயப் பங்குக்குருவின் வீடும் சேதமுற்றதை நான் குறிப்பிட்டிருந்தேன். யூலை 9ம் திகதி மாலை 4.45 மணியளவில் புக்காரா விமானத்திலிருந்து வீசிய கிளஸ்டர் குண்டினால் இச்சேதம் ஏற்பட்டது.

இக்கடிதத்துடன் சம்பவ தினத்திற்கு மறுநாள் நான் உங்களுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியையும் இணைத்துள்ளேன்.

## தென்னிந்திய திருச்சபை ஆயர் ஜெபநேசனின் அறிக்கை

கடந்த எட்டு ஆண்டுகளில் மிகக் கடுமையான தாக்குதல்களை இலங்கை இராணுவம் கடந்த ஞாயிறு அன்று 09.07.1995 தொடங்கியதில் ஏறத்தாழ 350 ஆயிரம் அப்பாவிக் குடிமக்கள் கிழக்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளனர் என்று தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் மறை மாவட்ட ஆயர் சுப்பிரமணியம் ஜெபநேசன் கூறினார்.

மக்கள் அகதிகள் முகாம்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் , இந்து மதக் கோவில்கள், பள்ளிகள் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ளதென்றும் சில முகாம்களில் இடம் இல்லையென்ற செய்தி வெளியில் ஒட்டப்பட்டிருப்பதென்று குரு அண்ணப்பா ஜெயக்குமார் கூறினார் .

ஆழ்ந்த கவலை

குடும்பத்தினருக்கும், மற்றும் இன்னலுறும் யாழ் மக்களுக்கும் தனது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்து திருமலை மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை யாழ் ஆயருக்குக் கடிதம் வரைந்துள்ளார்.

இவ்வாறு வத்திக்கான் வானொலி கடந்த சனியன்று (15.07.95) ஒலிப்பரப்பிய செய்தியில் கூறியது.

## ஆழ்ந்த கவலை தெரிவிக்கும் திருமலை – மட்டுநகர் ஆயர்

'முன்னோக்கிப் பாய்ச்சல்'எனும் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் யாழ் மக்களுக்கு விளைந்த இழப்புக்களையும் இன்னல்களையும் அறிந்து அதிர்ச்சியடைந்ததாகவும், பாதிக்கப்பட்டோருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும், மற்றும் இன்னலுறும் யாழ் மக்களுக்கும் தமது ஆழ்ந்த கவலையையும் தெரிவித்து திருமலை மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை யாழ் ஆயருக்குக் கடிதம் வரைந்துள்ளார்.

# காவலன் கலசம்

# பயனுள்ள பாடசாலை

வாழ்க்கை விழுமியக் கல்வியை ஊட்டும் களமாகப் பாடசாலை விளங்குகின்றது. உங்களை நல்ல மாணவர்களாகச் செயற்பட வைப்பது நல்ல பாடசாலையே. மாணவர்களே, நீங்கள் கற்கின்ற பாடங்கள், நீங்கள் பாடங்களில் வெளிக்காட்டும் ஆக்கபூர்வமான பங்களிப்பு, விருப்போடு கற்றல், கற்றலில் ஆர்வம், பிறருக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற மனப்பான்மை, பிறரது இன்ப துன்பங்களில் பங்கெடுத்தல், பிறருக்குத் துன்பம் விளைவிக்காது பிறரது உணர்வுகளை மதித்தல் போன்றவை உங்களை வளப்படுத்துவதற்கு, நீங்கள் மகிழ்வோடு வாழ்வதற்கு உதவுகின்றன.

**நேரம் தவறாமை**

பாடசாலை ஆரம்பமாவதற்குப் பத்து நிமிடங்களிற்கு முன்னரே பாடசாலை வளாகத்துள் நுழைந்து விடுங்கள். கற்றலில் ஆர்வம் குன்றிய மாணவர்கள் பொதுவாக எல்லாக் காரியங்களிலும் பிந்துவார்கள். பிந்திப்போகும் சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம் ஆசிரியரிடம் மன்னிப்புக் கோருங்கள். ஆசிரியர் கேள்வி கேட்கும் போதெல்லாம் எழுந்து, நிமிர்ந்து நின்று பதிலளியுங்கள். ஆசிரியர் அவ்வப்போது கேட்கும் கேள்விகளுக்குப் பொருத்தமான பதில்களைத் தெளிவாகவும் உரத்த குரலிலும் கூறுங்கள். மேசையில் சாய்ந்த வண்ணம் நிற்பதைத் தவிருங்கள். மதில்களில், கதவுகளில், கதிரை மேசைகளில் கிறுக்குவதைத் தவிருங்கள்.

வகுப்பு நடைபெறும் பொழுது பேசுவதைத் தவிர்த்துக் கற்றலில் கவனத்தைச் செலுத்துங்கள். பிறரிடமிருந்து ஏதாவது தேவைப்படின் மிகவும் மெல்லிய குரலில் கேளுங்கள். ஆசிரியருக்கு ஒழித்து மறைக்காமல், வெளிப்படையாக நடந்து கொள்ளுங்கள். சத்தம் போட்டுச் சிரிப்பதை, பேசுவதைத் தவிருங்கள். சகமாணவர்கள் தவறிழைக்கும் பொழுது சிரித்து நையாண்டி செய்யாதீர்கள். இவ்வாறு அநாகரீகமாக நடந்து கொள்வதால் அவர்களில் பெரும் மனப்பாதிப்பு ஏற்படலாம்.

சகமாணவர்கள் பேசும் பொழுது, குறிப்பாக, ஆசிரியர் கற்பிக்கும் பொழுது குறுக்கிடாதீர்கள். சில சந்தர்ப்பங்களில் விளங்காமல் இருக்கலாம் அல்லது ஆசிரியர் சொல்வதைப் பிழையாக விளங்கியிருக்கலாம். அச்சந்தர்ப்பங்களில் ஆசிரியர் பிழையென முரட்டுத்தனமாக, மரியாதைக் குறைவுடன் வாதாடாதீர்கள். வாதாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு பாடம் நிறைவுற்றதும், கீழ்ப்படிவுடன் ஆசிரியரைத் தனியே சந்தித்து விளக்கம் அளிப்பதே சிறந்த செயலாகும்.



**நடத்தைக் கோலங்கள்**

மாணவர்களே, பிறருக்கு உதவி தேவைப்படும் போதெல்லாம் தாமதியாது உதவி வழங்க முன்வாருங்கள். பிறருக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருத்தல், கல்விசார் நடவடிக்கைகளில் உற்சாகமாக நடந்து கொள்ளல், நுட்பமாகக் கற்றல்கலைக்குப் புதுவடிவம் கொடுத்தல் போன்றவை காலம் பூராவாகவும் உங்களது சிறந்த ஆளுமையை, நன்மைத்தனத்தைத் தூண்டுவிக்கும்.

ஆசிரியர் உங்களைச் சந்திக்கும்படி அழைப்பு விடுத்தால் அவ்வேளை ஆசிரியர் இன்னொரு மாணவனோடு பேசிக் கொண்டிருந்தால் அவசரப்படாதீர்கள். அமைதியாக நின்று அவரது உரையாடல் முடிந்ததும் மெதுவாக ஆசிரியரை அணுகுங்கள்.

பிள்ளைகளே, வகுப்பு முடிந்ததும் அவசரப்பட்டு ஆளை ஆள் தள்ளிக் கொண்டு மேசை கதிரைகளை முட்டிக் கொண்டு வகுப்பறையை விட்டு ஓடாதீர்கள். ஆசிரியர் வகுப்பறையை விட்டு வெளியேறியதும் அவ்வழியாக வெளியேறுங்கள்.

சிற்றுண்டிச்சாலையில் சாப்பிடும் பொழுது சாப்பாட்டுப் பழக்கங்களில் கவனமாய் இருந்து கொள்ளுங்கள். பல கண்கள் உங்களை உற்றுநோக்குகின்றன என்பதை மனதில் கொண்டு பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்.

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக்**

கண்ட கண்ட இடங்களிலெல்லாம் குப்பை போடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தாறுமாறாக அங்கும் இங்கும் ஓடி அலை யாதீர்கள். பண்பான முறையில் உங்களது அசைவுகளை மேற்கொள்ளுங்கள்.

**சுவையான சுக வாய்ப்புக்கள்**

பிள்ளைகளே, பாடசாலைச் சுற்றுலாக்கள், உள்ளக வெளியக விளையாட்டுக்கள் போன்றவற்றில் ஆர்வத்தோடு பங்கெடுங்கள். சக மாணவர்கள் விளையாட்டுக்களில் அல்லது கல்வியில் திறமாகச் செயற்படும் பொழுது உற்சாகப் படுத்துங்கள்.

ஆசிரியர்களோடு ஆரோக்கியமான உறவைப் பேணுங்கள். அவர்களுக்குரிய சிறப்பான மரியாதையை அளித்து, அவர்களைக் கனம் பண்ணி நடவுங்கள். ஆசிரியர்களுக்கு அவ்வப்போது வணக்கம் செலுத்திக் கீழ்ப்படிவுள்ள மாணவர்களாக ஒழுகுங்கள்.

சக மாணவர்களுடன் அன்பாகவும் கரிசனையுடனும் நடந்து கொள்ளுங்கள். பட்டம் தரித்து, ஏளனம் செய்து, நக்கல் பண்ணி, பகிடி வதைகள் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். சக மாணவர்களில் புதைந்துள்ள திறன்களை இனங்கண்டு அவர்களைப் பாராட்டுங்கள். மற்றவர்களது திறன்களை, வெற்றி நிகழ்வுகளை இனங்கண்டு, அவற்றை ஏற்று, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வதில் விழிப்பாயிருங்கள். பின்னாலிருந்து பிறரைக் கேலி செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நல்ல பழக்கங்களைப் பிறரிடமிருந்து கற்றுக் கொள்ளப் பின்வாங்காதீர்கள். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லோருடனும் மிகவும் அன்பாகவும் கரிசனையுடனும் ஒற்றுமையாகவும் நடந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு வழங்கப்படும் நன்மைத்தனங்களை நன்றி உணர்வோடு ஏற்றுக் கொள்ளுங்கள். உற்சாகம் நிறைந்த தொடர்முயற்சி, ஒழுக்கம், கீழ்ப்படிவு, கல்வியில் அக்கறை, சுறுசுறுப்பு, நேர்சிந்தனை போன்ற பண்புகளில் வளருங்கள். நல்ல விழுமியங்களை, நற்பண்புகளை உங்களது வாழ்வியல் ஏட்டில் பதிவு செய்யுங்கள்.

**சிறந்தவற்றைச் சிந்தியுங்கள்!**
**மறந்தவற்றை நினைந்திடுங்கள்!**
**விதைத்தவற்றை அறுத்திடுங்கள்!**
**விளைந்தவற்றில் மகிழ்ந்திடுங்கள்!**

# புனிதம் சிந்தும் பூவாய் மலர

நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள். அவர்களுக்கு நன்மை செய்யுங்கள். திரும்பக் கிடைக்கும் என எதிர்பார்க்காமல் உதவி செய்யுங்கள். அப்போது உங்கள் கைமாறு மிகுதியாய் இருக்கும். நீங்கள் கடவுளின் மக்களாய் இருப்பீர்கள். ஏனெனில் அவர், நன்றி கெட்டோருக்கும் பொல்லாதவருக்கும் நன்மை செய்கிறார். உங்கள் தந்தையாம் இறைவன் இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்.(லூக் 6:35-36)

ஒரு இக்கட்டான சூழ்நிலையில் ஒருவருக்குப் பொருள் உதவி தேவைப்படுகிறது. அப்பொழுது இரக்கத்தன்மை கொண்ட ஒருவர், அவரின் தேவையை உணர்ந்து பணம், பொருள் உதவி செய்து அவரைக் காப்பாற்றுகிறார். உதவியைப் பெற்றுக் கொண்டவர் உச்சி குளிர்ந்து நன்றி சொல்கிறார்.

அதேவேளை சிறிது காலத்தின் பின் மேற்படி உதவி செய்தவர்க்கு ஒரு துன்பமயமான சூழ்நிலை ஏற்படுகிறது. அதேநேரத்தில் அவரும் மனித நேய உதவிகளை எதிர்பார்க்கிறார். ஏற்கனவே இவரால் உதவிகளை பெற்று நன்றி சொன்னவர்கள் கண்டும் காணாதவர் போல் ஒதுங்கி விட்டார்கள். இருப்பினும் இவர் மனம் தளராமல் இறைவன் காப்பாற்றுவாரென உறுதியான மனநிலையுடன் தமது கடமைகளைத் தொடர்ந்தும் மனித நேயப்பண்புகளுடன் செய்து ஏனைய மக்களுக்கு முன் மாதிரியாக வாழ்ந்து புனிதம் சிந்தும் பூவாக மலர்ந்தார்.

**எமது வாழ்வின் சிந்தனைக்கு**

பெறுவதிலும் தருவதே இன்பம், என்று ஒன்று உண்டு அல்லவா? அதாவது பிறருடைய தேவைக்கு உதவும் பொழுது பிரதிபலன் எதிர்பார்க்காத மன நிலை, கைமாறு கருதாத உதவி இது விடயத்தில் நண்பர்களிட ம் மட்டுமல்ல திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் உள்ளவர்களுக்கும் பிரதிபலன் பாராது செய்கின்ற உதவியாகும்.

**வரலாற்றுப் பதிவில்**

கொடுத்துக் கொடுத்து சிவந்தன காணனின் கைகள். முல்லைக்குத் தேரைக் கொடுத்தான் பாரி வள்ளல், கொடுப்பதற்கும் இனி ஒன்றுமில்லை எனத் தன் தலையையே கொடுத்தான் குமணன். கொடு கொடு. கொடுத்துக் கொண்டே இரு. உன் கரங்கள் வலிக்கும் வரைக்கும் கொடு என்றார்கள் பார் புகழும் அன்னை திரேசா.

ஒரு வேளை, இதெல்லாம் இலக்கியத்திற்குச் சரி எமது நடைமுறை வாழ்வில் சாத்தியமாகுமா? என நாம் சிந்திக்கலாம். இருப்பினும் முயன்றுபார் முடிந்த அளவு "புனிதம் சிந்தும் பூவாய் மலரலாம்". உதவி செய்வதற்கு எம்மிடம் பணம், பொருள், தங்கம், வைரம், இருப்பினும் பிறர் அன்பு, மனித நேயம், இரக்கம் எனும் மனநிலை வேண்டும்.

**வன்னிவாழ் இதயம்**
**ம.சூசைமுத்து**

**உய்த்துணர்ந்து சிந்திப்பதற்கு**

ஒரு ஊரில் துறவி ஒருவர் வாழ்ந்து வந்தார். அதே ஊரில் ஒர் ஏழையான மனிதனும் வாழ்ந்து வந்தார். துறவியாரிடம் விலை மதிப்புப் பெற்ற வைரக்கல் ஒன்று ஏற்கனவே கிடைக்கப் பெற்று அதைத் தமது சாக்குப் பையில் வைத்திருந்தாராம். அதேவேளை அந்த ஏழை வாழ்வதற்கு மிகவும் கஸ்டமான மனநிலையில் இருந்து கொண்டு எந்நேரமும் இறைவனிடம் வேண்டுதல் செய்து கொண்டு இருப்பாராம்.

ஒருநாள் இறைவன் அந்த ஏழைக்குக் கனவில் தோன்றி நீ போய் அந்தத் துறவியிடம் இருக்கும் வைரக்கல்லைக் கேட்டுப் பெற்றுக்கொள் என்று சொன்னாராம். மறுநாள் அந்த ஏழை ஓடிச்சென்று அந்த துறவியைச் சந்தித்து முதல் நாள் தான் கண்ட கனவை அவரிடம் பணிவுடன் சொல்லி அந்த வைரக் கல்லை கேட்டாராம். அதேவேளை சிறிது நேரம் கூட தாமதிக்காமல் அந்த துறவி தமது சாக்குப் பைக்குள் இருந்த வைரக்கல்லை எடுத்துக் கொடுத்தாராம். உடனே அதைப் பெற்றுக் கொண்ட அந்த ஏழை நேரே வைரக்கடைக்குச் சென்று அங்கு இருந்த வியாபாரியிடம் அந்த வைரக்கல்லைக் காட்டி அதன் பெறுமதி எவ்வளவு எனக் கேட்டாராம். அந்த வைரக்கல்லை சோதித்துப் பார்த்தப்பின் வியாபாரி அடேயப்பா என்ன அற்புத மான வைரம். இது பல இலட்சம் ரூபா பெறுமப்பா இந்த வைரக்கல் என வியந்து சொன்னாராம். அதை கேட்டதும் ஏழை மயங்கி விழாத நிலையில் இருந்தாலும் தாமதம் இல்லாமல் நேரே சென்று அந்தத் துறவியிடம் வைரக்கல்லை ஒப்படைத்து விட்டு இதைவிடப் பெரிய சொத்து உங்களிடம் இருக்கிறதே தயவு செய்துஎனக்குத் தாரும் எனப் பணிவாக அந்த ஏழை கேட்டாராம்.

அதேநேரம் அந்தத் துறவி. அதிசயத்துடன் அந்த ஏழையைப் பார்த்து வேறு எந்தச் சொத்தும் என்னிடம் இல்லையப்பா என்று இரக்கத்துடன் சொன்னாராம். உடனே அந்த ஏழை சொன்னாராம் ஐயா, இவ்வளவு விலைமதிப்புள்ள இந்த வைரக்கல்லை நான் கேட்ட உடனே மறு பேச்சுப் பேசாது கொடுக்கின்ற நல்ல இதயத்தைப் பெற்றுள்ளீரே. அது தான் வைரக்கல்லை விடப் பெரிய சொத்து. எனவே உமது இதயத்தை எனக்குத் தாரும் எனப் பணிவுடன் கேட்டாராம்.

இன்று இறைமகன் இயேசுவும் எம்மிடம் அதைத்தான் எதிர்பார்க்கிறார். மனித இதயம் என்றாலே அன்பு, பாசம், பரிவு, இரக்கம், கனிவு, தியாகம் நிறைந்ததாக இருக்க வேண்டும்.

ஒன்றே செய் - நன்றே செய் - இன்றே செய். இறையரசு, இறையரசு என்றே முழங்கு. நிறைவாழ்வு தனைக்கான உன்னையே வழங்கு. இதயங்கள் மலரட்டும். இங்கு இன்னிசை முழங்கட்டும். நம்மில் இறையருள் வளரட்டும். இகமெல்லாம் பரவட்டும்.

# மாமா போய்ற்று வாறேன்

அருட்பணி
சி.அஜந்தன்

வேப்பம் பூக்கள் விழுந்து மஞ்சள் மஞ்சளாய் சிதறிக் கிடந்த குழந்தை இயேசு கோவில் வாசலோரமாய் என் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி வைத்துக் கவனமாய் பூட்டித் திறப்பெடுத்த பின், இன்னொரு முறை என் சைக்கிள் பூட்டைச் சரிபார்க்கின்றேன். சுற்றி நிற்கும் இந்தக் கூட்டத்தில் எவன் திருடனோ? மனிதர்களில், தெய்வங்களில் வைத்திருக்கும் அத்தனை நம்பிக்கைகளையும் கோவில் வாசலில் நாம் போடும் பூட்டுக்களே பொய்யாக்கி விடுகின்றன.

சைக்கிளைப் பூட்டி நிமிர்கையில்தான் இந்தக் காட்சி என் கண்ணில் பட்டது. அந்தச் சிறுமி அவள் ஒரு குட்டி நிலவுதான். நட்சத்திரச் சிரிப்புக்கள், சிதறிக் தெறிக்க, றோஜா மொட்டு உதடுகளால் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள். சிவப்பு நிறத்தில் வெள்ளைப் பூக்கள் வரைந்த குட்டிச் சட்டை போட்டு இரட்டைக் குடும்பி கட்டிய அவளின் அசைவுகள் எல்லாவற்றிலும் ஒரு குட்டித் திருவிழா போல குதூகலித்தபடி நின்றாள். மூன்றோ, நான்கோ வயதிருக்கலாம். அவள் என்னை அதிசயிக்கவில்லை. அவள் நின்ற இடம் என்னை அசைய விடாமல் அவளையே பார்க்கச் செய்தது.

பல நாள் புழுதி படிந்த அழுக்கேறிய சாரம், கிழிந்து தையல் போட்ட மேல் சட்டையோடு நெஞ்சில் விழும் நீண்ட தாடியுடன், தண்ணீர்பட்டு பல நாளான பரட்டைத் தலையோடு ஒரு பிச்சைக்காரன் கோவில் தெருவோரமாக அமர்ந்திருந்தார். அவருடைய மடியிலே ஏறி நின்று இந்தக் குழந்தை அவருடைய தாடியைப் பிடித்து விளையாடி, கன்னத்தில் மெதுவாய் அடித்து, ஏதேதோ கேள்விகள் கேட்டு அத்தனை உரிமையோடு நின்றுகொண்டிருந்தது. அந்தப் பிச்சைக்காரனின் கண்களில் பாலைவனத்தில் மழை பெய்தது போல மகிழ்ச்சி ஈரம் கட்டி நின்றது.

அப்போது அந்த ஆலயத்துக்கு



வந்திருந்த ஒரு இளம் தம்பதியர் : "உன்னைப் போல உன் அயலானையும் நேசி" என்று போதித்த இயேசுவின் சுரூபத்திற்கு முன்னால் கண்மூடிச் செபித்து விட்டு திரும்பிப் பார்த்த போதுதான் தங்கள் குழந்தையைக் காணவில்லை என்ற நினைவு வருகிறது அந்த இளம் தாய்க்கும் தந்தைக்கும். வேகமாக ஓடி வந்து தங்கள் காருக்கு அருகில் தேடுகிறார்கள் அப்படியே இரண்டு அடி எடுத்து வைத்த போது தங்கள் குழந்தை பிச்சைக்காரனின் மடியில் நிற்பதைக் காண்கிறார்கள். ஓடி வந்து குழந்தையை சட்டென்று பிடுங்கி முதுகில் ஒரு அடி அடித்து "இது என்ன பழக்கம் கண்ட பிச்சைக்கார நாயின்ர மடியில் எல்லாம் ஏறி நிற்கிறது" என்ற படி குழந்தையைத் தூக்கித் தோழில் போட்டபடி காரை நோக்கி நடந்தாள் தாய். குழந்தை அணிந்திருந்த நகைகளை கண்களால் கணக்குப் பார்ப்பதில் அவள் கவனம் முழுவதும் போகிறது. அப்போது அவளது தோழில் கிடந்த குழந்தை அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து "மாமா போய்ற்று வாறேன் டாடா…டாடா…" என்று கையசைத்தது.

எனக்கு ஏதோபோல இருந்தது. அந்தப் பிச்சைக்கார முதியவரின் கண் இமை நரைத்துப்போன ஏக்கக் கண்கள் நிறைய கண்ணீர் நிறைந்து நின்றது. சட்டென்று உடைப்பெடுத்து ஒழுகிக் கன்னத் தாடி மயிர்களுக்குள் ஒழுகிய கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டிருந்தார். வாழ்க்கை அத்தனை அவமானத்தின் புழுதியையும் இந்த வீதி ஓரத்து மனிதர்கள் மேல் ஏன் எப்போதும் அப்பிச் செல்கிறது. அவர் ஏன் உடைந்து ஒழுகிக்கொண்டிருந்தார்? பிச்சைக்கார நாய் என்ற வார்த்தை ஒரு கத்தியைப் போல இதயத்தில் இறங்கியதால் அழுதாரா? தன் சொந்த மகள் வீட்டைவிட்டு விரட்டிய அந்த மழை இரவில் வாசலில் நின்று அழுத தன் பேத்தியை நினைத்தாரா? வேரோடு பிடுங்கி வீதியில் எறியப்பட்ட ஒரு காய்ந்துபோன மனிதனின் தனிமையில் பொழிந்த ஒரு ஈரமழை சட்டென்று நின்றுபோகிறதே என சங்கடப்பட்டாரா? கண்ணீர்கள் எவ்வளவு இரகசியமானவை. ஒவ்வொரு மனிதனின் கண்ணீர்த் துளியையும் பிளந்துபார்த்தால் அதற்குள் எவ்வளவு கதைகள் துடித்துக் கொண்டிருக்குமோ…?

வளர்ந்து விட்ட மனிதர்களின் உலகில் பிச்சைக்காரர்கள், ஏழைகள் எல்லாம் மனிதர்களின் பட்டியலில் இருந்தே அழிக்கப்பட்டே விடுகிறார்கள்.

ஆனால் குழந்தைகளின் உலகில் அழுக்கடைந்த தாடி வளர்த்த எல்லாப் பிச்சைக்காரர்களும் "மாமாக்களாக" சொந்தமாகி விடுகிறார்கள். நாங்களும் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்தவர்கள் என்ற உண்மை எம் நினைவுகளில் இருந்து ஒரு கனவைப் போல மறந்தே போய்விடுகிறது.

அவர் விரல் நடுங்கிய படி கையசைத்து அழுகையை தொண்டைக்குள் அடக்கி செயற்கையாய் சிரிக்கின்றார். ஒரு குற்றவாளியைப் போல பதறி, கண்களில் கசிந்த கண்ணீரைப் புறங்கையால் துடைத்த போது அந்த ஈரம் என் இதயத்தைச் சுட்டுக்கொண்டே இருந்தது.

மரத்தடிச் சருகைப்போல காய்ந்துபோன எல்லாத் தெரு வோர மனிதர்கள் மீதும் ஏதோ ஒரு குழந்தையின் ஈரக் கரம் தொட்டுக் கொண்டுதான் இருக்கிறது, கடவுளின் தொடுகையை உணர்த்தியபடி….

---



# மனித மனப் பதிவு

அருட்பணி. இ.செ.விஜேந்திரன் அ.ம.தி.
'வளர்பிறை'
உளவளத்துணை நிலையம்

மனப்பதிவு என்ற சொல்லானது எம்மில் பலருக்கு புதுப் பொருளாகவே உள்ளது. ஆனால் இம் மனப்பதிவே நமது வாழ்வில் தற்போது வரைக்கும் எம்மை வழிநடத்திச் செல்கின்றதென்பதை அறியாதுள்ளோம். சிறு வயது முதல் நாம் தூக்கிச் சுமக்கின்ற உணர்வுகள், வாழ்வின் அனுபவங்கள், சிந்தனைகள், நடத்தைகள் என்பன வாழ்வின் ஒரு தொகுப்பாகும். இவற்றின் அடிப்படையிலேயே நாம் நேரான, எதிரான மனப்பதிவுகளைப் பெற்றுக்கொள்கின்றோம். எமது மனப்பதிவுகள் வாழ்வில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும், எதிரான மனப்பதிவுகளை நேரான மனப்பதிவுகளாக்கி எம் வாழ்வை எவ்வாறு சீர்செய்யலாம் என்ற தெளிவினையும் பெற்றுக்கொள்ளலாம்.

பிளவுபட்ட குடும்பங்கள், ஆரோக்கியமற்ற குடும்பங்கள், பண்பற்ற குடும்பங்கள் ஆகியவற்றிலிருந்து பிறக்கின்ற குழந்தைகள் அனைவரும் தமது வாழ்வை நினைத்து வேதனைப் படுவதோடு தம்முடைய குடும்பத்தை நினைத்தும் வெட்கப்படுகின்றனர். இவை பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையில் பல எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. அதாவது அப்பாவின் குடிப்பழக்கம், திருமண வாழ்வில் உண்மையற்ற தன்மை, தாயுடனான முரண்பாடுகள், பெற்றோரின் அன்பு கிடைக்காமை, பாராட்டுக் கிடைக்காமை, பெற்றோரின் விரோதச் செயல்கள், சிறுவயதில் பிள்ளை அப்பா அல்லது அம்மாவினைப் பிரிதல், குடும்பத்தில் குழப்பங்கள் போன்றன பிள்ளைகளின் மனப் பதிவில் எதிர்மறையான எண்ணங்களைத் தோற்றுவிப்பதோடு எதிர்கால வாழ்வானது உணர்வு, சிந்தனை, நடத்தை என்பவற்றில் சமநிலை இழக்கப்பட்டு குழம்பிய நிலையில் காணப்படுவார்கள்.

குடும்பத்தில் சந்தோசம் இன்மை, பெற்றோர் வேலைக்குச் சென்று வந்து பிள்ளைகளை அடித்தல், அன்பு செய்யாமை, அக்கறையின்மை, அதிகாரமான உறவு நிலை, பெற்றோருடன் தனிப்பட்ட விடயங்களைப் பகிர இயலாமை, தேவைகள் பூர்த்தியாக்கப்படாமை போன்ற காரணங்களினால் பிள்ளை தீய நண்பர்களுடனான உறவு நிலைகளை ஏற்படுத்துகின்றது. இதனால் பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி இளமைப் பருவத்திலேயே பல தீய பழக்கங்களில் ஈடுபடுவதோடு எதிர்ப் பாலினருடனான தவறான உறவு நிலைகளுக்கும் தள்ளப்படுவதனால் மனச்சோர்வு, கவலை, தனிமை, விரக்தி, கோபம், பயம் போன்ற உணர்வு நிலைகளிற்கு ஆளாகின்றார்கள்.

பல வருடங்களுக்கு முன்பு ஒஸ்ரியா நாட்டினரான கொறட் லோறன்ஸ் என்ற பிரபல உளவியலாளர் பல பறவைகளைக் கொண்டு ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். கோழி முட்டையிலிருந்து குஞ்சு வெளி வந்தவுடன் தாய் கோழிக்குப் பதிலாக ஒரு நாயை அந்த கோழிக் குஞ்சுகளுடன் இணைத்து விட்டார். அக் குஞ்சுகள் நாய் தான் தமது தாய் என்று நினைத்து மனப்பதிவினைப் பெற்றுகொண்டனர். நான்கு மணி நேரத்திற்குப் பின் தாய் கோழியினை மீண்டும் குஞ்சுகளுடன் இணைத்த போது அக் கோழிக் குஞ்சுகள் தாய்க் கோழி சத்தம் போட்டும் தமது தாயினைக் கண்டுகொள்ளாது நாய்க்குப் பின்னால் சென்றன.

ஒஸ்ரியாவில் கொறட் லோறன்ஸ் என்ற பிரபல உளவியலாளர் மற்றுமொரு ஆராய்ச்சியை மேற்கொண்டு கோழி முட்டையிலிருந்து குஞ்சு வந்த உடன் தாய்க் கோழிக்குப்பதிலாக பெண் ஒருவர் குஞ்சுகளைத் தடவி சாப்பாடு கொடுத்து முகத்திலே முத்தமிட்டு அரவணைத்தாள். ஒரு நாளிற்குப் பின்னர் கோழிக்குஞ்சுகள் தமது தாயினை நிராகரித்து தாய்க் கோழிக்குப் பதிலாக அப் பெண்ணைத் தமது தாய் என்று நினைத்து மனப்பதிவைப் பெற்றுக்கொண்டது. குஞ்சுகள் உலகத்திற்கு வந்த நிமிடத்திலிருந்து அந்தப் பெண்ணுடன் பழகியதனால் அப் பெண்ணே கோழிக்குஞ்சுகளுக்கு அம்மா என மனதில் பதியப்பட்டது. இவ் ஆய்வுகளின் அடிப்படையில் மிருகங்கள் பறவைகள் என்பன பிறக்கும் போது யாரை முதலில் காணுகின்றனவோ அதனடிப்படையில் தான் மனப்பதிவினைப் பெற்றுக் கொள்கின்றன. ஆனால் மனிதர்கள் இதைவிட அதிகமாகத் தமது மனப்பதிவுகளைப் பெற்றுக்கொள்கின்றனர். நீங்கள் சிறு வயது அனுபவத்திற்குச் சென்று பார்க்கும் போது பிறந்ததில் இருந்து ஒரு வயதுவரை யார் உங்களை அதிகம் தொட்டுத்தூக்கி, குளிப்பாட்டி, சிறுநீர் கழிக்கும் போதும், மலம் கழிக்கும் போதும், ஆண், பெண் பாலுறுப்புக்களைத் தொட்டுக் கழுவுகின்றார்களோ அந் நபரிடமுள்ள இயல்புகளையே அக் குழந்தையானது அதிகமான மனப்பதிவுகளாகப் பெற்றுக்கொள்கின்றது. ஆகவே குழந்தைகள் ஆரோக்கியமான மனப்பதிவினைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களின் தாய் மட்டுமே இச் செயற்பாடுகளைச் செய்தல் வேண்டும். இம் மனப்பதிவானது பின்வரும் மூன்று நிலைகளில் பதிவாகின்றது.

## 1. உடல் மனம்

தாயிடமிருந்து சுரக்கப்படும் புரோலக்டின் (prolactin) என்னும் ஹோர்மோன் மூலம் ஏற்படும் உடல் மணத்தினூடாக தாயக்கும், பிள்ளைக்குமிடையே உறுதியான பிணைப்பு ஏற்பட்டு மனப்பதிவானது உருவாகின்றது.

## 2. உடற் கட்டமைப்பு

பிள்ளையானது பிறந்ததிலிருந்து அதிகம் யாரைப் பார்த்துப் பழகுகின்றதோ அவர்களுடைய உடல் அமைப்பு, முகத்தோற்றம் போன்றவற்றை மனப்பதிவாகப் பெற்றுக்கொள்கின்றது. அதாவது பிறந்தவுடனேயே தத்தெடுக்கப்படுகின்ற பிள்ளைகள் அதிகம் தம் வளர்ப்புத் தாய் அல்லது தந்தையின் முகத் தோற்றம், உடல் அமைப்புப் போன்றவற்றைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடியும்.


## 3. பழக்கவழக்கங்கள்

பிள்ளையானது தான் பிறந்ததிலிருந்து குடும்பம், சமூகம் என்பவற்றினூடாக பெற்றுக்கொள்கின்ற உணர்வுகள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் என்பவற்றைத் தன் மனப் பதிவுகளாகக் கொள்கின்றது. அவையே எதிர்காலத்தில் அப் பிள்ளையின் குணவியல்புகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

அந்தவிடத்து, மனப்பதிவு என்பது, ஒரு கரு உருவாகியது தொடக்கம் ஏழு வயது வரை தம் தாய், குடும்பம், சமூகம், சூழல் என்பவற்றிலிருந்து பெற்றுகொள்கின்ற உணர்வுகள், சிந்தனைகள், செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு மூளையில் பதியப்படுகின்றது. இதுவே மனப்பதிவாகும். இம் மனப்பதிவானது ஒருவரது உடல், உள, சமூக செயற்பாடுகளில் பெரும் செல்வாக்குச் செலுத்தி வாழ்நாள் முழுவதும் மனிதனுடைய ஆளுமை உருவாக்கத்திலும் பங்காற்றுகின்றது.

காவலன் கலசம்

# மிக இளவயதில் தனிமையில் கொடூரமான வேதனையோடு அவள் மரணமடைந்தாள்



(சென்றவாரத் தொடர்ச்சி)

**பாத்திமா தேவ அன்னை :**

அவரும் பிரான்சிஸ்கோவும் தேவ அன்னையின் வாக் குறுதியான "சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்ல விரைவில் வருவேன்" எனத் தொடர்பு உடையதாக இருக்கலாம், என மரண அச்சுறுத்தல்களைக் கருதினார்கள்.

இரகசியத்தை அவர்கள் தெரியப்படுத்தினால் மாத்திரமே சிறுவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலா மென ஒரு பாதுகாவலர் தெரிவித்தார். ஜசிந்தா பயந்து நடுங்கினாலும், பேச மறுத்ததால் கைது செய்யப்பட்டார். அடுத்தது பிரான்சிஸ்கோ என்ற ஒழுங்கு முறையாயி னும், தனது முறை வந்தபோது இரு உறவினர்களும் (Cousin) துன்புறுத்தல் எதுவும் செய்யப்படாது உயிரோடு இருப்பதனைக் கண்டார். இறுதியில், பாத்திமா பதியின் ஆயநிர்வாகிகளிடம் அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஆகஸ்ட் 19 ஞாயிறு அவர்கள் தமது நான்காவது தரிசனத்தைக் கண்டனர். மற்ற இருவரோடும் இணைந்து கொள்வதில் ஜசிந்தா தாமதமானாலும், அவர் சமூகம் தரும் கடைசி நிமிடம் வரைக்கும் தேவ அன்னை தரி சனம் கொடுப்பதற்காகக் காவலிருந்தார் என்பது முக்கிய மானது. "உனது மகளில், தேவ அன்னை விசேட அக்கறை யுடையவர்" என அயலில் வசிக்கும் ஒரு பெண் டீ மார்ட் டோவிடம் (Ti Marto) விமர்சித்திருந்தார்.

1918 அக்டோபரில் அவர்கள் இஸ்பானியக் காய்ச் சல் (Spanish Influenza epidemic) எனப்படும் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட போது, தேவ அன்னை மிகவிரை வில் வந்து பிரான்சிஸ்கோவைக் கூட்டிப்போவதாகத் தெரிவித்ததாகத் தனது உறவினரிடம் (cousin) ஜசிந்தா தெரிவித்தார், அதாவது, தனியாகவே இருவைத்தியசாலை களுக்குப் போவார் என்பதாகும். லூசியா நினைவுகளை மீளாய்வு செய்து, தனது இளவயது உறவி னர் எங்கள் ஆண்டவரையும், தேவ அன்னையையும் எவ்வளவு தூரம் நேசித்தாள் என்பதைக் குறித்துத் தெரிவிப்பதில் ஒருபோதும் சோர்வடையவில்லை.எனதுநெஞ்சில் நெருப்பு இருக்கிறது. ஆனால், அது என்னை எரிக்காது. "நரகத் தின் சிந்தனையினால் பாவிகளைக் காப்பாற்றுவதில் அவள் வெறிபிடித்து இருந்தாள்".

ஜசிந்தா முதலில் நிமோனியாவுக்கும் (pneu-monia) அதன்பின்னர் கசநோய்க்கும் (tuberculosis) உள்ளாகி விலா நோவா டி ஓரெமில் உள்ள மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டார். லூசியாவிடமிருந்து பிரிந்து செல்வதை அவள் வெறுத்தாலும், அவளுடைய துன்பத்தை ஒரு தியாகமாக வழங்குவதற்கு அளித்த வாய்ப்பை அவள் வரவேற்றாள். இரண்டு மாதமாகியும் சுகமடையாமல் வீடு திரும்பினாள். பின்னர் அவர் லிஸ் பனுக்கு அழைத்துச் செல்லப்பட்டாலும், மருத்துவமனை யில் படுக்கைகள் எதுவும் கிடைக்காது அவள் ஒருவகை அனாதையான நிலைக்குத் தள்ளப்பட்டாலும், அங்கே தினமும் நற்கருணை பெறும் வாய்ப்புக் கிடைத்த தால், மகிழ்ச்சியாக இருந்தாள்.

**பாவிகள் மனம் திரும்புதல்**

1918 டிசம்பரில் ஜசிந்தா மார்புச் சளிக்காய்ச்சல் (broncopneumonia) எனப்படும் வியாதிக்கு உள்ளானாள். ஐந்து மாதங்களுக்குப் பின்னர் அவளது சகோதரன் இறந்தார். அவளது சகோதரனின் இறப்பால் ஜசிந்தா மிக வும் வேதனைப்பட்டாள், குறுகிய காலத்திற்குள் அவளது மார்புச் சளிக்காய்ச்சல் (broncopneumonia) நோயின் பல்வேறு தாக்கத்தின் அதிகரிப்புக்கு ஆளானாள்.

ஒருநாள் அவள் லூசியாவிடம், "தேவ அன்னை என்னை வந்து சந்தித்து நான் இன்னமும் பாவிகளுக் காகத் துன்புற வேண்டுமா? எனக்கேட்டபோது நான் "ஆம்" எனப்பதிலளிக்க, அப்போது அவர் நான் விரைவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதோடு, இன்ன மும் அதிகம் வேதனைப்படுவேன் என்றார். ஆயினும், இயேசுவின் அன்புக்காகவும், பாவிகளது மனமாற் றத்திற்காகவும், தனது இருதயத்திற்கும், இயேசுவின் இருதயத்திற்கும் எதிரான குற்றங்களுக்கு ஈடாகவும், அனைவரையும் அரவணைக்க" அவள் சொன்னாள். எனது தாயார் என்னுடன் வந்தாலும் பின்னர் நான் தனியாக விடப்படுவேன்". அப்படியே நடந்தது.

**இள வயதில் பாதிக்கப்பட்டவர்**

வைத்தியர்களது உத்தரவுக்கமைய வில்லா நோவா (Vila Nova Hospital) வைத்தியசாலையில் சிகிச்சை பெற இரண்டு மாதம் சென்றிருந்தாலும், வீட்டிலிருந்து என்ன நிலையில் சென்றாளோ அவ்வாறே திரும்பியதோடு, நெஞ் சிலே ஒரு பெரிய காயத்துக்கு ஒவ்வொருநாளும் சிகிச்சை யளிக்க வேண்டியிருந்தது. ஆனாலும், போதிய சுகாதார வசதியின்மையால், காயம் மேலும் அதிகமதிக மாகப் பாதிப்படைந்ததோடு, அது உண்மையாகவே ஜசிந்தாவின் வேதனையை அதிகரித்தது. அது ஒரு தொடரான தியாக மாக இருந்தாலும், எதுவித முறைப்பாடும் செய்யாது அவள் வேதனையைத் தாங்கிக்கொண்டாள். தனது தாயாருக்கு மேலும் வேதனையைக் கொடுக்கக்கூடாது என்பதற்காக அவள் இந்த வேதனைகளைத் தனக்குள் மறைத்துக் கொண்டாள். நான் நன்றாக இருக்கிறேன் எனத் தெரி வித்துத் தனது தாயாரை ஆறுதல் படுத்தினாள்.

தான் உடல் சுகவீனமுற்ற நிலையிலும் தனது உற வினரைத் (cousin) திடப்படுத்தினாள். "நான் வேதனை களை அதிகமாக அனுபவித்தாலும், பாவிகளது மனமாற் றத்திற்காகவும் அன்னை மரியாவின் மாசற்ற இருதயத் திற்குப் பரிகாரமாகவும் அனைத்தையும் ஒப்புக்கொடுக்கி றேன்" என்றார். 1920 ஜனவரியில், லிஸ்பன் என்னு மிடத்தில் உள்ள வைத்தியசாலைக்கு நல்ல பராமரிப்புக் காக ஜசிந்தாவைக் கொண்டுசெல்ல வேண்டுமென அவ ரது தாயாரிடம் ஒரு விசேட வைத்திய நிபுணர் தெரி வித்தார். இவ்வாறு செல்வதால் தனது உறவினர் லூசியாவிடமிருந்து பிரிந்திருப்பது ஜசிந்தாவுக்கு மிகவும் வேதனையைக் கொடுத்தது.

(தொடரும்....)

# வழிபாடு வாழ்வாகுமா!!

(கடந்த இதழின் தொடர்ச்சி....)

**இறை பிரசன்னம்**

இறை பிரசன்னம் என்பது வழிபாட்டில் உணரப்படுகின்றது, உணர்த்தப்படுகின் றது. திருப்பலியில் இறைவனின் வார்த் தையிலும், நற்கருணையிலும் உண்மை யான பிரசன்னத்தை உணருகின்றோம். இதே பிரசன்னம் குருவிலும், இறை மக்கள் கூட்டத்திலும் இருக்கின்றது என்பதை மறக்கக்கூடாது. ஆனால், இந்த இறை பிர சன்னம் என்பது ஒரு நேர வறையறைக் குட்பட்டது அல்ல. மாறாக 'என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும்' (யோவா:14:9) என்று இயேசு தன்னைக் காணவும், தனது பிரசன்னத்தால் நிறைந் திருக்கவும் சொல்லித்தருகின்றார். ஆக வழிபாட்டில் நாம் இயேசுவைக் காண முடியும். 'இயேசுவைக் காண விரும்புகி றோம்' யோவா 12:20 என்று கிரேக்கர் சிலர் வந்து பிலிப்புவிடம் கேட்கின்றனர். இயேசுவின் பிரசன்னத்தை அனுபவிப்பது அவரை அனுப்பியவரின் பிரசன்னத்தை அனுபவிப்பதாகும்.

Paanim (பாணிம்) என்னும் எபிரேய சொல்லானதுமுகம்என்கின்ற அர்த்தத்தைக் கொடுக்கின்றது. இந்தச் சொல்லானது அண் ணளவாக நானூறு தடவைகள் பழைய ஏற்பாட்டிலே காண்கின்றோம். இதிலே நூற் றுக்கும் அதிகமான தடவைகள் இறை-வனை மட்டும் குறிப்பதாக அமைகின்றது. உருவமில்லாத இறைவன் எவ்வாறு ஒரு வடிவத்தைப்பெற்றிருக்க முடியும் என்றால், முதலாவதாக, பாணிம் எனும் வார்த்தை மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையி லான உறவை வலியுறுத்துகின்றது. இர ண்டாவதாக, உருவமில்லாதவர் புதிய ஏற்பாட்டிலே கருவாகி உருவாகி இறை மகனாகப் பிறப்பதை, மனிதனுக்கே சாய லையும், பாவனையையும் கொடுத்தவர், அதைப் பெற்று மனிதனாகப் பிறக்கின்றார், வடிவம் பெறுகின்றார். இப்போது 'என்னைக் காண்பது தந்தையைக் காண் பது ஆகும்' (யோவா:14:9) முகம் எனும் வார்த்தை உறுதியான அர்த்தத்தைப் பெறுகின்றது. கிரேக்க மொழியிலும் கூட இந்த முகம் எனும்வார்த்தையை prosopon-(ப்ரொசொ போன்) என்றும் அழைக்கலாம். இந்தக் கிரேக்க வார்த்தையிலிருந்து persona எனும் இலத்தின் வார்த்தை உருப்பெற்றி ருக்கலாம். (திரித்துவம் எனும் திருச்சபை யின் கொள்கையில் ஒரே கடவுள் மூன்று நபர்களாக இருக்கின்றார் [one God in three person] என்பதை விபரிப்பதற்கு இந்த வார்த்தை அதிகமாக அடிப்படையில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்) இந்த வார்த் தைகள் கடவுளை ஒரு நபராக அடை யாளப்படுத்துகின்றது இந்த நபர் தமது மக்களைப் பற்றி அக்கறையுள்ளவராகக் காட்டப்படுகின்றார் இதே நபர் தான் எமது குரலுக்கு செபிமடுப்பவராகவும், எம்மைப் பார்ப்பவராகவும் எம்மை அன்பு செய்பவ ராகவும் காட்டப்படுகின்றார். மனிதனும் அவருடைய சாயலாகவும் காணப்படுகின் றான். இதனால் கடவுளை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடிகின்றது (திபா: 105: 3-4). இந்தக் கடவுளைத் தான் நாம் வழிபாட்டில் முகம் முகமாய் பார்க்க முடிகின்றது, 'நானோநேர்மையில்நிலைத் திருந்து உமது முகம் காண்பேன் விழித் தெழும்போது, உமது உருவம் கண்டு நிறைவு பெறுவேன்' (திபா:17:15) இதே பிரசன்னத்தைத் தான் நாம் அனுபவிக்க முடிகின்றது. ஆலயத்தில் அவர் வாழ்கின் றார். அவர் குடிகொள்ளும் இல்லமாக அது அமைகின்றது. ஆண்டவர் வாழும் இந்த இடம் தூயதாகும். இறைவனைப் பார்க் கும்அந்தஇடம்தூயதாகும். ஆகவேதான் நாம் ஆலயத்தினுள் அமைதி பேணுகின் றோம். சீனாய் மலையிலே இறை பிரசன் னத்தை உணர்ந்த மோயீசன் தனது முகத்தை மூடிக்கொண்டார். தூய்மையை உணர்ந்த பின்பு, தெய்வீகத்தை உணர்ந்த பின்பு ஒருவர் எவ்வளவிற்கு தாழ்ச்சி உள்ளவராக மாறுகின்றார். இதே வார்த் தையைத் தான் புதிய ஏற்பாட்டில் இயேசு கூறுகின்றார்: 'தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்'.

வழிபாட்டிலே இறைவனின் பிரசன்னத்தை உணர அவரது பெயரை நாம் பயன்படுத்துகின்றோம். இறைவ னுக்குக் கிட்டத்தட்ட 1000 வகையான பெயர்களை நாம் பார்க்கின்றோம். ஆனால் கடவுள் ஒருமுறை மட்டும் தான் தனது பெயரை மோயிசனுக்கு வெளிப் படுத்தினார். 'இருப்பவராக இருக்கின்றா வர் நாமே' (விப: 3:11-15) ஆண்டவரை 'Elohim', 'YHWA', 'Abba', 'El-Elyon', 'El-Roi', 'YHWH- yireh', 'El-shaddai' என்றெல்லாம் அழைக்கின்றோம்.




அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

(தொடரும்...)

# காவலன் கலசம்

## யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

(சென்றவாரத் தொடர்ச்சி...)

1861ம் ஆண்டு வடக்குத்திருத்தூது மாவட்டத்தின் மறைத்தளங்கள், ஆலயங்கள், மறைபணியாளர்கள், கத்தோலிக்கர் சம்மந்தமான புள்ளி விபரம்

| மறைத்தளங்கள் | குருக்களின் எண்ணிக்கை | ஆலயங்கள் | சிற்றாலயங்கள் | கத்தோலிக்கர் | பிரிவினை வாதிகள் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 3 | 7 | 13 | 7,100 | - |
| பருத்தித்துறை | 2 | 8 | 17 | 3,946 | 243 |
| வலிகாமம் | 1 | 4 | 18 | 5,012 | - |
| ஊர்காவற்துறை | 1 | 6 | 10 | 5,930 | - |
| மன்னார் | 2 | 6 | 24 | 549 | 200 |
| மாதோட்டம் | 2 | 3 | 30 | 4,200 | 600 |
| வன்னி | 1 | 17 | - | 1,000 | - |
| குருணாகல் | 1 | 1 | 1 | 714 | - |
| கல்பிட்டி | 2 | 3 | 19 | 3,193 | - |
| சிலாபம் | 3 | 14 | 13 | 5,200 | - |
| திருகோணமலை | 2 | 2 | 3 | 1,660 | - |
| மட்டக்களப்பு | 2 | 5 | 2 | 1,992 | - |

- யாழ் திருத்தூது மாவட்ட எல்லைக்குள் உள்ள புரட்டஸ்தாந்து சபையினரின் எண்ணிக்கை 2000
- யாழ் திருத்தூது மாவட்டத்தில் ஆயருக்குரிய முறைப்படி யான பேராலயம் என்று ஒன்று இல்லாவிட்டாலும் திருத்தூது முதல்வரது நிரந்தர வதிவிடம் பெரிய புதிய மரியன்னை ஆலயம் (தற்போதைய பேராலயம்) ஆகவும் திருத்தூதுமுதல்வருடன் மேலும் இரு குருக்களும் இங்கு தங்கியிருந்தனர். இம்மூவரும் அவ்வப்போது மகா ஞானொடுக்கம் போன்ற ஆன்மீக நிகழ்வுகளுக்கு திருத்தூது மாவட்டத்தில் பல்வேறு மறைத்தளங்களைத்தரிசிப்பது வழக்கம்.
- யாழ் திருத்தூது மாவட்டத்தில் பல விசாலமான ஆலயங்களிருந்தாலும் எல்லாம் நன்கு உறுதியாகக்கட்டிமுடிக்கப்பட்டவையாகவோ, போதிய தளபாடங்கள் போன்றவற்றைக் கொண்டவை யாகவே உள்ளன என்று சொல்ல முடியாது
- 250 அயர்லாந்துதேச போர்வீரர்களைத் தவிர கத்தோலிக்கர் எல்லோரும் சுதேசிகளாவர் ஆயினும் ஏறக்குறைய 1000 பேர் போர்த்துக்கேயர் அல்லது ஒல்லாந்தரது வழித்தோன்றல்கள் அல்லது ஐரோப்பியர்களையும் சுதேசிகளையும் கொண்ட கலப்பு இனத்தவர் இந்த 1000 பேரும் தமிழ் பேசுபவர்களாயுள்ளனர்.
- வன்னியிலுள்ள கிறிஸ்தவ சமூகங்களுக்கென ஒரு நிரந்தர வதிவிட அருட்பணியாளர் இல்லை. அவ்வப்போது இங்குள்ள சமூகங்களை யாழ்ப்பாணம் அல்லது மாதோட்டம் அல்லது மன்னாரில் இருந்து மறைப்பணியாளர் தரிசித்து வருவது வழக்கம்.
- சிலாப மாவட்டத்தில் சிலாபம், வென்னப்புவ, போளவத்தை ஆகிய மூன்று தனித்தனி மறைத்தளங்கள் உள்ளன.

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

## சிந்தாத்திரை மாதா

தாழ்ச்சியின் மறு உருவமாய்
காவலின் கன்னிகையாய்
கரை தனில் வீற்றிருந்து
காவல் செய்யும்
புனித சிந்தாத்திரை அன்னையே

திசையறியாமல் கடலில் தவிப்பவரை
பாதுகாக்கும் எம் தாயே
ஞாலம் என்றும் புகழ்ந்தேற்றும்
உம் கோடி அற்புதங்களை

மனுக்குலத்தின் தாயாய் உதித்தவளே
மனுக்குலத்தின் மைந்தனைத்
தந்தவளே
என்றென்றும் ஆராதிக்கும்
இப்பூமி உம்மை

பரிந்துரையின் வழியாய்
அடைக்கலம் தருபவளே - உம்
அன்பு நிறைந்த கண்களால் எம்மைக்
கண்ணோக்கும் தாயே

அவர் தம் இரத்தம் ரோஜா மலரில்
கண்களின் மகிமை மின்னிடும்
விண்மீன்கள்
நித்தியகால தூள் பனிதன்னில்
ஒளிர்ந்திடுமாமே அவர் தம் திரு உடல்

**லூக்காஸ் . அனுப்பிரியா**
**தரம் - 09**
**கொக்கிளாய்- முல்லைத்தீவு**

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது...

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

**பணி தொடர்ந்த பாதை.....**

ஆனால் எல்லோருடைய விமர்சனமும் இவரது மனதைத் தளரவைத்தது. ஆனால் எல்லாம்அறிந்தபேராயர்அவரைத்தேற்றித் திடப்படுத்தினார். புதுமையின் எதிரொலி போல்விரைவில்பிரான்சின்மூலைமுடுக்குகளில் இருந்து பொதுமக்களும், குருக்களும், திருக்குடும்ப சபையில் அங்கத்தவர்களாகத் தங்களைச் சேர்த்துக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டினர். பொது-நிலை உறுப்பினர் தொகை பெருகவே, துறவறவாழ்வை விரும்பியோரின் தொகையும் அதிகரிப்பதாயிற்று. சபையைத் திட்டமிட்டவாறு உருவாக்குவதற்கான காலம் வந்துவிட்டதாக நிறுவுனர் உணர்ந்து கொண்டார். இசியில் ஞானஒடுக்கம் செய்தபோது, தேவஅன்னையின் ஆசி-யோடு எழுதப் பெற்றிருந்த லொறெற்றோ சகோதரிகள் சபைக்கான (இன்றைய போர்டோவின் திருக்குடும்ப சகோதரிகள்) ஒழுங்கு விதிகளை போர்டோ நகரப் பேராயர் அவியோ அவர்கள் அங்கீகரித்தார். (27.10.1825)

இறைவன் எம் சபையை ஆசீர்வதித்ததோடு, தொடர்ந்து தம் பிரசன்னம் சபைக்கு என்றும் இருக்கும் என்பதையும் உறுதிப்படுத்தினார். திருக்குடும்ப சபையின் வரலாற்றில் மறக்கமுடியாத உயிருள்ள அனுபவ நாளாகும்.

தனிமையின் இனிமையிலே "அமைதிகொண்டு, நானே கடவுள் என உணர்ந்துகொள்ளுங்கள்" (திருப்பாடல் 46:10) பியன்வெனு தந்தைக்கு மிகவும் பிரியமானது ஏகாந்தம். இயேசு தனிமையில் தந்தையோடு கொண்ட உறவை, அவரில் தங்கியிருந்த நிலையைப் பியன்வெனுவும் தம் வாழ்வில் அனுபவித்தார். நசரேத்குடும்பத்தின்ஒவ்வொருஉறுப்பினரும் (இயேசு,மரி, சூசை) இந்த ஏகாந்தத்தில் இறைவனின் சித்தத்தைக் கண்டு கொண்டனர். தங்களால் விளங்க முடியாதவற்றை உள்ளத்திலிருத்திச் சிந்தித்து செபத்தில் காத்திருந்தனர்.

தந்தை, மகன், தூயஆவியின் அன்பானது இப்பிரபஞ்சம் முழுவதும் பாய்ந்தோடி முடிவற்ற அவரது அன்பை வெளிப்படுத்துகின்றன. ஏகாந்தமும், அமைதியும், தனிமையும் படைப்பின் ஒவ்வொரு அணுவையும் அதிசயமாக நோக்கவும், வியக்கவும், இரசிக்கவும், மகிழவும், நன்றிகூறவும் நம்மை அழைக்கின்றன. முடிவில்லா அன்பின் சுனைக்கு எம்மை இழுத்துச் செல்கின்றன. தூய ஆவியார் அமைதியின் ஏகாந்தத்தில் எமது இதயத்தைத் தூய்மைப்படுத்தி எளிமையாக்குகின்றார். இறைவனோடும், எம்மோடும், சகோதரர்களோடும், இயற்கையோடும் உறவுகொண்டு இறை பிரசன்னத்தை எங்கும் கண்டு, எல்லாவற்றின் மகத்துவத்தையும், மாண்பையும் மதிக்க எம் இதயக்கண்களைத் திறந்து விடுகின்றார். அமைதியில் இறைவனின் குரலுக்குச் செவிமடுத்து, செவிமடுப்பவற்றைத் தனித்திருந்து சிந்தித்து, இறைஒளியில் முடிவுகளை எடுக்கவும், எடுப்பவற்றுக்கு எப்போதும் விழிப்புடனும், உய்த்துணரும் மனநிலையுடனும் பதிலிறுக்கவும் ஏகாந்தம், ஆழ்நிலைத் தியானம் எமக்கு அருளின் வாய்க்காலாக இருக்கின்றது. இவையே பணிக்கான உந்துசக்தியை எமக்கு அளித்துச் சென்ற இடமெல்லாம் நன்மைசெய்த இயேசுவின் பாதையில் பயணிக்க வலுவூட்டுகின்றது. இதனாலேயே எம் தந்தை பியன்வெனு ஏகாந்தத்திற்கு தன்வாழ்வில் முக்கியம் கொடுத்து வாழ்ந்தார். வாழ்க்கைப் பாதையின் விளக்கு "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது. ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகின்றது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகின்றது. உள்ளத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கின்றது." (எபிரே 5:12) தாவீதரசர் தன் வாழ்வின் அனுபவத்தினூடாக இறைஅனுபவத்தை உணர்ந்து பாடிய 119ம் திருப்பாடலூடாகத் தந்தை பியன்வெனு இறைவார்த்தையில் வேரூன்றி வாழ்ந்த மனிதன் என்பதைக் காண்கின்றேன்.

- "இளைஞன் தான் செல்லும் வழியில் புனிதனாய் எங்ஙனம் வாழ இயலும்? உம் வார்த்தையைக் கடைப்பிடிப்பதால்தான்"
- "உம் வார்த்தைகளை நான் கடைப்பிடித்து வாழும்வண்ணம் உம் ஊழியன் எனக்கு அருள்தாரும்"
- "தீயவழி எதிலும் அடி எடுத்து வைக்காதபடி நான் பார்த்துக்கொள்கின்றேன். உம் வார்த்தையின்படி நடப்பதே என் கவலை"
- "நான் நடக்கவேண்டிய பாதையைக் காட்டும் விளக்கு உம் வார்த்தை. செல்லும் வழிக்கு வெளிச்சமும் அதுவே."
- "ஆண்டவரே மிகமிகத் துன்புறலானேன். உம் வார்த்தையின்படி என்னை உயிரோடு வைத்தருளும்."
- "நீரே என் பாதுகாப்பு. நீரே என் கேடயம். உம் வார்த்தைமீது நம்பிக்கை வைக்கின்றேன்."
- "உம் வார்த்தைகள் தரும் விளக்கம் அறிவொளி தருகின்றது. அது எளியோர்க்கு அறிவூட்டுகின்றது."
- "உம் வார்த்தையின் உட்பொருள் உண்மையினின்று வழுவாதது. நீதி வாய்ந்த உம் தீர்ப்புக்கள் என்றும் நிலைத் திருப்பவை."
- "தலைவர்கள் என்னைக் காரணமின்றித் துன்புறுத்தினர். என் இதயம் உம் வார்த்தைகள்மீது அச்சம் கொண்டுள்ளது"
- "ஆண்டவரே என் கூக்குரல் உம்மிடம் வருவதாக. உமது வார்த்தைக்கேற்ப எனக்கு அறிவு புகட்டும்"
- "என் உள்ளம் ஊக்கம் தளர்ந்து சோர்வுற்றது. உம் வார்த்தையின்படி எனக்கு வாழ்வளித்தருளும்."
- "துயரமிகுதியால் என் உள்ளம் கண்ணீர் வடிக்கின்றது. உம் வார்த்தையின்படி என்னை ஊக்குவியும்."
- "உமக்கு அஞ்சுவோர் என்னைக் கண்டு மகிழ்ச்சியுறுவர். உமது வார்த்தையை நான் நம்பினதற்காக மகிழ்வர்."
- "உமது உதவிபெறும் ஆவலால் என் உள்ளம் ஏங்குகின்றது. உம் வார்த்தையை நான் நம்பியுள்ளேன்."
- "வைகறையில் உம்மிடம் வருகின்றேன். உம் வார்த்தையில் நம்பிக்கை வைக்கின்றேன்."

**உறுதிகொண்ட உணர்வலைகள் பேசுகின்றன**

உலகில் பல இளைஞர்களைப்போல் நானும் 22 வயது வரை வாழ்ந்தேன்.. பின்னர் குருமடத்தில் இரண்டு வருடமும் ஒன்பது மாதமும் வாழ்ந்து 26 வயதில் மிக நுண்மையான ஒரு பணியில் ஈடுபட்டேன். இவ்வாறான பணியில் பல புனிதர்கள் தங்கள் அசைக்கமுடியாத நற்பெயரை இழந்திருக்கின்றார்கள்.

(தொடரும்...)

**அருட்சகோதரி லுமினா போல்ராஜா**
**திருக்குடும்பக் கன்னியர் சபை**

# காவலன் கலசம்


35

# அவசரகாலப் பதில்?

அருட்பணி செ. அன்புராசா

அருட்தந்தை செ. அன்புராசா, அமதி அடிகளார் **‘என் கேள்விக்கென்ன பதில்!’** என்ற பகுதியை கடந்த வாரம்வரை எழுதிவந்தார். காலத்தின் அறிகுறி-களைக் கருத்தில் கொண்டு அவரின் பதில்கள் **‘அவசரகாலப் பதில்’** என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். வாசகர்களாகிய நீங்கள் கேள்விகளைக் கேட்டு பயனடைய இப்பகுதியைப் பயன்படுத்துங்கள். ஆர்

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*
**கேள்வி: மக்களின் அன்றாட வாழ்வுக்கும் அவர்களின் ஆன்மீக வாழ்வுக்கும் இடையில் குறிப்பாக இன்றைய சூழலில் பாரிய இடை வெளி நிலவுகின்றதே! இது ஆரோக்கியமானதா?**
ப: நிச்சயமாக ஆரோக்கியமானது அல்ல! அன்றாட வாழ்வும் ஆன்மீக வாழ்வும் இரண்டு துருவங்களாய் இருக்க முடியாது. ஆன்மீக வாழ்வு அன்றாட வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டும். ஆன்மீக மதிப்பீடுகள் அன்றாட வாழ்க்கை முறையில் - வாழும் முறையில் வெளிப்பட வேண்டும். அன்றாட அநுபவங்கள் ஆன்மீக வாழ்வுக்கு அணிசேர்க்க வேண்டும். ஒருவரின் அன்றாட வாழ்வும் ஆன்மீக வாழ்வும் இரண்டு தண்டவாளங்கள்போல ஒன்றையொன்று சந்திக்கவில்லை என்றால் அவருக்குள் முரண்பட்ட வாழ்வு வாழ்கின்றார் என்பதே பொருள்!

*(மதன், மன்னார்)*
**கே: புதிதாகத் திருமணம் செய்பவர்களுக்கு நீங்கள் சொல்லக்கூடிய நற்புத்திமதி என்ன?**
ப: நிறைய இருக்கின்றது! இருப்பினும் கணவனாகப் போகிறவனுக்கும் மனைவியாகப் போகிறவளுக்கும் ஆளுக்கு ஓர் ஆலோசனையைக் கூறுகின்றேன். கணவன் கொங்கிறீற் சீமெந்(Concrete Cement) மாதிரி! கொங்கிறீற்றப் போட்ட உடனே மிதிக்கவோ, அடிக்கவோ, அமத்தவோ, குத்தவோ கூடாது! நல்லா செற் (set) ஆகும்வரை விடவேண்டும், காத்திருக்க வேண்டும்! செற் ஆகிய பின், என்ன வேண்டுமானாலும் உங்கள் விருப்பம் போல் எதுவும் செய்யலாம்! ஒன்றும் ஆகாது!... மனைவி மண்டபம் மாதிரி! தொடக்கத்திலேயே உங்களுக்கு ஏற்றது மாதிரி அறெஞ்மென்ற் (arrangement) செய்துகொள்ள வேண்டும். அவ்வாறல்லாமல் செற்றிள்(settle) ஆகவிட்டால் அதன்பின் ஒன்றும் செய்ய முடியாது! எப்படி இருக்கின்றது ஆலோசனை?

*(அருந்தா, யாழ்ப்பாணம்)*
**கே: வீதி விபத்துக்கள் மீண்டும் தலைவிரித் தாடுகின்றனவே! வீதி விபத்துக்களைக் குறைக்க என்ன செய்யலாம்?**
ப: வேகத்தைக் குறைத்தால் வீதி விபத்துக்கள் குறையும்!

*(யோசப், யாழ்ப்பாணம்)*
**கே: மற்றவர்களை எப்போதும் சந்தேகப் பார்வையோடு பார்ப்பவர்கள் குறித்து என்ன கருதுகின்றீர்கள்?**
ப: உளநோயாக இருக்கலாம் அல்லது உளநோய்க்கான அறிகுறியாக இருக்கலாம்!... உண்மையில், ‘சந்தேகக் கோடு அது சந்தோஷக் கேடு’ என்று கூறுவார்கள். இது முற்றிலும் உண்மையானது. இது பெரும் வீணான ஊகங்களை உருவாக்கி, மனக் கசப்புக்களை ஏற்படுத்தி, நாளடைவில் சம்மந்தப்பட்டவர்களிடையே உறவுச் சிக்கல்களை உண்டாக்கி அவர்களிடையே விரிசலை உண்டுபண்ணி ஈடுசெய்ய முடியாத இழப்புகளை சிலவேளைகளில் ஏற்படுத்திவிடும்! ‘சண்டைப் பிராணிகளோடு வாழ்ந்துவிடலாம் சந்தேகப் பிராணிகளோடு வாழமுடியாது’ என்ற அநுபவப் பகிர்வில் ஆழ்ந்த பொருள் உண்டு.

*(வசந், யாழ்ப்பாணம்)*
**கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2020 நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்று சரித்திரம் படைக்கும் என கௌரவ இரா சம்பந்தன் திருகோணமலையில் வைத்துக் கூறியிருக்கின்றார். படைக்குமா?**
ப: நிச்சயமாகப் படைக்கும்! ஆனால், எப்படிப் படைக்கப் போகின்றது என்பது தான் கேள்வி! அதிக ஆசனங்களைப் பெறுவதிலும்பார்க்க அதிக ஆசனங்களை இழந்து சரித்திரம் படைக்கவே இம்முறை அதிக வாய்ப்புண்டு!

*(நாதன், பிரான்சு)*
**கே: சமயமும் ஆன்மீகமும் ஒன்றா?**
ப: சமயமும் ஆன்மீகமும் ஒன்றல்ல! ஆனால் ஒன்றையொன்று முழுமைப்படுத்தக் கூடியது, மழுமைப் படுத்த முடியும், முழுமைப் படுத்த வேண்டும். சமயம், ஒரு முடிவு அல்ல அது வழி. சமயங்கள், இறைவனை அடைய வழிகாட்டவேண்டும். சமயங்கள் ஆறுகள் போன்றவை. அவை சமுத்திரத்தில் சென்று சேர்கின்றன. ஆறுகள் சமுத்திரம் ஆவதில்லை. ஆனால், சமுத்திரம் ஆறுகளால் அலங்காரமாகின்றது, அழகாகின்றது. சமயம், ஆன்மீக அனுபவத்தைப் பெற உதவமுடியும், அவ்வனுபவத்தை அது கொடுப்பது சமயத்தின் தலையாய கடனாகும். ஆனால், சமயங்கள் பொதுவாக அதனதன் ‘கிரிகை’களோடு நிறுத்திக் கொள்கின்றனவே தவிர அவற்றின் உச்ச நோக்காகிய ஆன்மீகத்தைக் கொடுப்பது குறைவு!

*(அருண், வவுனியா)*
**கே: 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தரப்புக் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**
ப: இன்னும் கொஞ்சக் கட்சிகளும் இன்னும் கொஞ்சம் சுயேட்சைக் குழுக்களும் உருவாகி, இன்னும் கொஞ்சப் பேர் வேட்பாளர்களாக நின்றிருந்தால் தமிழர் தரப்புக்கு மேலும் சீரும் சிறப்புமாக இருந்திருக்கும்!

*(அருள், யாழ்ப்பாணம்)*
**கே: 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் யாரை ஆதரிக்கலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**
ப: மிக முக்கியமான கேள்வி!... புல்லின் நிறம் குறித்து ஒரு கழுதைக்கும் ஒரு சிறுத்தைக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. கழுதை, ‘புல், நீல நிறம்!’ என்றது. சிறுத்தையோ, ‘இல்லை, அப்படி இருக்க முடியாது! புல் பச்சை நிறம்தான்!’ என மறுத்துச் சொன்னது! இரண்டும் தங்கள் தங்கள் கருத்தில் பிடிவாதமாய் நின்றதால், இதற்கான தீர்வைக்காண காட்டின் அரசன் சிங்கத்திடம் சென்றன. சிறுத்தை சொல்வதற்கு முன்பாகவே கழுதை சிங்கத்தைப் பார்த்து, ‘சிங்கராஜா சிங்கராஜா, புல்நீலநிறம்என்றுநான்சொல்கின்றேன்! ஆனால், இந்தச் சிறுத்தை பச்சை என்று சொல்கின்றது! நீங்கள் சரியான தீர்ப்பைச் சொல்லி இந்த முரண்பாட்டிற்கு ஒரு முடிவு கட்டவேண்டும்!’ எனக் கேட்டுக் கொண்டது. சிங்கம், ‘நீ சொல்வதுபோல, புல் நீல நிறம்தான்!’ என விடையளித்தது! கழுதைக்கு மிகுந்த சந்தோசம். மேலும் அது, “சிங்கராஜா, நீங்கள் என்னைப் போல நன்கு விடயங்களை அறிந்தவர் என்பதால் இதற்கு விடை சொல்வது உங்களுக்கு ஒன்றும் கஸ்ரமில்லை! ஆனால், இந்தச் சிறுத்தை என் சொல்லைக் கேட்காமல், புல் பச்சை நிறம்தான் என்று, பிடிவாதமாய் நின்று, என்னை வெறுப்படையச் செய்கிறது. ஆகவே, இந்தச் சிறுத்தைக்கு நீங்கள் சரியான தண்டனை வழங்கவேண்டும்!’ எனக் கேட்டுக்கொண்டது. கழுதை கோரியது போல, சிறுத்தைக்கு ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கிச் சிங்கராஜா தீர்ப்பளித்தது. ஆனாலும், சிறுத்தை சிங்கத்தை அணுகி, ‘சிங்கராஜாவே, புல் பச்சை நிறம்தானே!?’ எனக் கூறியதற்கு சிங்கம், ‘ஆம் பச்சை நிறம்தான்!’ என்றது! ஆச்சரியம் மேலிட சிறுத்தை, ‘பின், ஏன் புல் நீலநிறமென்று கழுதை சொன்னது சரியெண்டு கூறியது மட்டுமில்லாமல், சரியாச் சொன்ன எனக்கு ஓராண்டு சிறைத்தண்டனை வழங்கித் தண்டிக்கிறீர்கள்!?’ எனப் பணிவாக் கேட்டது. சிங்கமோ, ‘புல் பச்சை நிறமாகவோ நீல நிறமாகவோ இருப்பதில் பிரச்சினை இல்லை!... நீ தண்டனை பெற்றதுக்குக் காரணம், துணிவான புத்திக் கூர்மையான நீ, போயும் போயும் இந்தப் படு முட்டாள் கழுதையோடு இந்த அற்ப விசயத்தப்போய் விவாதிச்சதுதான்!’ என்றது. அப்ப, இந்தக் கதையிலிருந்து உங்களுக்கு என்ன விளங்குகிறது?

நடக்கப்போற தேர்தலில் நேர்மையான, பொய்சொல்லாத, மக்கள் சேவையில் உண்மையாக ஈடுபடுகிற, மக்களை ஏமாற்றாத, மக்கள் மத்தியில் வாழுகின்ற, உரிமைகளை வென்றெடுக்கக் கூடியவர்களுக்கு வாக்களிப்பது மிக மிக மிக அவசியம்! அதைவிடுத்து, முட்டாள் கழுதைகளுடன் விவாதித்துக் கொண்டிருந்தால் அடுத்த அஞ்சு ஆண்டுகளுக்கு, சிறுத்தைக்குக் கிடைச்சதுபோல நமக்கும் தண்டனைக் காலமாகத்தான் அமையும்!

# கைபேசிக்குள் இலவசக் கல்வி
# எட்டாக்கனியே ஏழை எனக்கு

கண்ணீரின் ஈரசகதியில்
நனைந்து பிய்யும்
ஒரு காகிதத்தின்
கதையையும்
உங்கள் கவிதையில்
எழுதுங்களேன் …..

கொஞ்சம் உங்கள்
கற்பனைகளை
என் பக்கம் திருப்புங்கள்
உங்கள் கற்பனைகளைக்
கடந்த நிஜங்களை
உங்கள் கவிதைகளுக்குள்
நான் புகுத்துகின்றேன் ….

பரந்து விரிந்த பூமிதனில்
பாவப்பட்ட பிறப்பா
இந்த ஏழை எனக்கு
பசிபோக்க வழியில்லை
பரதேசி உனக்கு ஏன்
பாரினில் இந்தப்
பள்ளிப் படிப்பு என்று
பலபேர் கேட்டதுண்டு ….

சிரித்தப்படியே சொன்னேன்
கல்விக்கு இல்லை
ஏழை, பணக்காரன்
என்ற வேறுபாடு ….

ஒட்டிப்போன என் வயிறுக்கும்
அழுக்குப்படிந்த என்
உடைகளுக்கும்
என்னை அழகாக
காட்டியது இந்த
பள்ளி தந்த இலவசக்கல்வி ….
விலையில்லாக்
கல்வி என்றார்
எம்மைப் போன்ற
ஏழை எளியவருக்காக
இலவசக்கல்வியைக்
கொண்டு வந்தார்
இன்று
இலவசக் கல்விகூட
எட்டாக்கனியாகிறது
இந்த ஏழை எனக்கு …

முகம் துடைக்க
கைக்குட்டை வாங்க
காசு இல்லாத ஏழை எனக்கு
கைபேசியில் கற்பது
சாத்தியமாகுமா…?

கற்பது இலகுவாம்
கைபேசிக் கற்கையாம்
எங்கு இருந்தும் கற்கலாமாம்
இங்கு இருப்பவர்கள் மட்டுமே
கற்க முடியுமாம் ….

ஒன்லைன் படிப்பாம்
என்கிறார்கள்
ஒழுக்கு வீட்டுக்காரி நான்
ஒடு மாத்தக்கூட வழியில்லாத
ஏழை எனக்கு
ஒன்லைன் பழப்பிற்கு
எங்கு செல்வது …?

முடக்கத்தில் முடங்கிக் கிடப்பது
என் பள்ளிக் கூடம் மட்டுமல்ல
இந்த ஏழையின்
கல்வியும் தான் ..

இருக்க இடம்
இல்லாத ஏழை எனக்கு
இணையக்கல்வியை
எங்கு வாங்குவது …?
எவரிடம் வாங்குவது …?

கல்வியிலும் பாகுபாடு
கைபேசியினால் வேறுபாடு
இருக்கின்றவன் கற்கின்றான்
இல்லாதவன் இழக்கின்றான்
இருந்தும் தேர்வுகள்
இருவருக்கும் ஒன்றுதான் …

இருக்க இடம் இல்லாத
ஏழை எனக்கு,
இணையத்தில் எனக்கு
ஒரு பக்கம் என்று சொல்ல
எந்த இடமும் எனக்கில்லை …
உன் கவிதைப் பக்கத்திலாவது
எனக்கொரு இடத்தினை
ஒதுக்கி விடு ….

என்னைப் போன்ற ஏழைகளின்
கைபேசிக் கற்கையின்
கஸ்டத்தை பலர் புரிவார்…

இலவசக் கல்வி கூட
எட்டாக்கனியாகிறது
இந்த ஏழை எனக்கு …

**ஆ.பீ. கிறேஸ்**
கலைப் பீடம்
யாழ் பல்கலைக்கழகம்

# மரியசேவியரின் ‘மறைபொருள் நாடகங்கள்’

**மரியசேவியரும் நாடகங்களும்**

திருமறைக் கலாமன்றத்தின் தாபகரும் இயக்குநருமான அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளின் அகவை எண்பதின் அமுத விழாவினை நினைவுகூரும் முகமாக அண்மையில் திருமறைக்கலா மன்றத்தினால்



1960 களில் மரியசேவியர் அடிகள் எழுதிய 10 நாடகங்களின் தொகுதியாக **“மறைபொருள் நாடகங்கள் தொகுதி -1”** என்ற நூலானது வெளியிடப்பட்டுள்ளது. அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக கலைப் பணியாற்றிவரும் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகள் ஈழத்து நாடக வரலாற்றிலும், கிறிஸ்தவ நாடக வரலாற்றிலும் தடம் பதித்துள்ள மிக முக்கியமான அரங்க ஆளுமையாவார். குறிப்பாக கத்தோலிக்க நாடக வரலாற்றில் தனது படைப்புக்களால் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியவர். அவரது படைப்புக்கள் ஆய்வு செய்யப்படவேண்டிய அதே வேளை அவரது ஆக்கங்கள் நூலாக்கம் பெறுவதும் அவசியமாகும். அந்த வகையில் இந்நூல்பற்றிய ஒரு பார்வையை இன்றைய ‘கலைக்
காவலன்’ வெளிப்படுத்த முயல்கின்றது.

1960களில் மரியசேவியர் அடிகள் நாடகங்களை எழுதுவதனைத் தனது சிறப்பான கடமையாகக் கொண்டு நாடகங்களைஎழுதினார். மேடையேற்றுவதற்காகவும் வானொலியில் ஒலிபரப்புவதற்காகவும் அவரது நாடகங்கள் எழுதப்பட்டன. ஏறத்தாழ 25க்கு மேற்பட்ட நாடகங்கள் அவரால் எழுதப்பட்டன. அவற்றில் சில நாடகங்களின் பிரதிகள் தொலைவடைந்திருந்தாலும். அவ்வாறு கிடைத்தவற்றில் இருந்து இந்நூலில் பத்து நாடகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

**நாடகநூலின் பெயர்**

இந்நூலுக்கு மறைபொருள் நாடகம் என்ற பெயரிடப்பட்டிருக்கின்றது. மத்திய கால ஐரோப்பாவிலே தோற்றம் பெற்ற நாடகங்களில் ‘மறைபொருள் நாடகங்கள்’ (Mystery Plays) குறிப்பிடத்தக்கவை. மறைபொருள் நாடகங்கள் எனப்பட்டவை திரு விவிலியத்தினை அடிப்படையாகக் கொண்ட நாடகங்களாக இருந்தன. அவற்றின் கதைப் பொருளானது பழைய ஏற்பாட்டின் உலகப்படைப்பு முதல் திருவெளிப்பாட்டில் கூறப்படும் உலக முடிவு வரையான விடயங்கள் வரை கதைப் பொருளாக அமைந்திருக்கும். உதாரணமாக ஆதாம் ஏவாள் உலகப்படைப்பு, காயீன் ஆபேல் கொலை என அமையலாம். பதின்மூன்றாம் நூற்றாண்டில் இத்தாலி, பிரான்ஸ், லண்டன் போன்ற நாடுகளில் இம்மரபு செல்வாக்குப் பெற்றிருந்தது.. இந்நாடகங்கள் வேதாகமத்தில் இருந்த கதைப்பொருளைச் சொல்வதாக இருந்தாலும் அக்கதைப் பொருளுடன் தொடர்புடைய சில கற்பனைகளையும் இணைத்தே மேடையேற்றப்பட்டன.

எடுத்துக்காட்டாக ‘இரண்டாவது இடையன்’ என்ற மத்திய கால நாடகத்தினைக்குறிப்பிடலாம். அம்மரபினை ஒத்த வகையில் மரியசேவியர் அடிகள் எழுதிய வேதாகமத்தினை அடிப்டையாகக் கொண்ட நாடக நூலுக்கு இப்பெயர் இடப்பட்டமையானது மிகப்பொருத்தமாக அமைந்துள்ளது.

இந்நாடகத் தொகுப்பில் இடம்பெறும் பத்து நாடகங்களில் முதல் இரண்டு நாடகங்களும் பழைய ஏற்பாட்டுடன் தொடர்புபட்டவை. ஏனையவை புதிய ஏற்பாட்டுடன் தொடர்புபட்டவை

**நாடகங்களும் பாடுபொருளும்**

‘செந்தணல்’ - பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்ற யூதா அரசனின் வரலாற்றினைக் குறிப்பிடுகின்றது. இஸ்ராயேல் மக்கள் எதிர்கொண்ட போர்கள் அவர்கள் மூட்டிய செந்தணலாய் மாறியமையையும், இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் இருந்த வரலாற்றினையும் நாடகம் சொல்லுகின்றது.

‘கவலையின் எல்லை’ பழைய ஏற்பாட்டில் உள்ள யோபு மகானின் வரலாற்றினை மிகச்சிறப்பாகக் கூறுகின்ற நாடகமாகும். இது இறையியல்சார் கருத்துக்களையும் வாழ்வியல்த் தத்துவங்களையும் மிகவும் அழகாகக் கூறுகின்றது.




சாத்தான் இறைவனுடன் உரையாடுவது முதல் யோபு செல்வங்களை இழந்து தவிப்பது இறைவனை கேள்வி கேட்பது அதற்கு விளக்கம் என நாடகம் தொடர்கின்றது. மானிட வாழ்வின் நியதியை சிறப்பாகக்கூறுகின்றது

‘குவலயம் பெற்ற குழந்தை’ நாடகமானது கிறிஸ்து பிறப்பினைக்கூறும் வரலாற்று நாடகமாகும் இந்நாடகத்தில் மொழி விளையாடுகின்றது. ஏரோதன் பாத்திரச் சித்தரிப்பானது மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. கிறிஸ்மஸ்கால நாடகமாக இது அமைகின்றது

‘இன்றிரவு’ விவிலியத்திலுள்ள பணக்காரன் உவமையை அடிப்படையாகக் கொண்ட நாடகமாகும். இதில் பணக்காரனின் உவமை அடிப்படையாக இருந்தாலும் அவனது வாழ்க்கை முறையானது கற்பனையாகச் சித்திரிக்கப்படுகின்றது அவனது, நண்பர்கள் ஊழியர்கள் எனப் பல கற்பனைப் பாத்திரங்களும் மரணம், தூதுவன் என இரு உருவகப்பாத்திரங்களும் கையாளப்பட்டு சிறந்த நாடகமயப்பட்ட வடிவமாக இது காணப்படுகின்றது

‘எழுதியகரம்’ திருவிவிலியத்திலுள்ள பாவிப் பெண்ணின் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்ட நாடகமாகும். வரலாற்றினை அப்படியே நாடகமாக்கினாலும் பாவிப்பெண் இயேசுவிடம் கொண்டு வரப்படுவதற்கு முன் சமயத்தலைவர்களின் சதித்திட்டம், அதற்கென அப்பாவிப் பெண்ணைத் தேர்ந்தெடுத்தல், திட்டமிட்டு கையும் களவுமாகப் பிடித்தல் அதன் பின் இயேசுவிடம் அவளைக் கொண்டு வருதல் என முன் கற்பனை இந்நாடகத்தில் அதிகம் காணப்டுகின்றது. அத்துடன் பல்வேறு அரங்கியல் அம்சங்கள் இதற்குள் நிறைந்துள்ளன.

‘வா மகனே வா’ இந்நாடகம் விவிலியத்திலுள்ள ஊதாரிப்பிள்ளை உவமையை அடிப்படைக்கதையாகக்கொண்ட நாடகமாகும். இதில் ஊதாரி மகனின் வாழ்க்கை கற்பனையுடன் ஆக்கப்பட்டுள்ளது அவனுக்கு ராஜன் என்ற நண்பனைக் கற்பனைப்பாத்திரமாக உருவகித்து அவனது பேச்சினைக்கேட்டு இவன் ஏமாந்துபோவது சித்திரிக்கப்பட்டுள்ளது. அவனது சதியையும் பண்பினையும் அவன் எழுதுகின்ற ஒரு கடிதம் மூலமாக சித்திரிப்பது புதிய உத்தியாகும். ‘சோதனைக்களம்’ இயேசு நாற்பது நாள் சோதிக்கப்பட்டதனை அடிப்படையாகக் கொண்டு இந்நாடகம் எழுதப்பெற்றுள்ளது. சமகாலத்துக்குரிய பல்வேறு முக்கியத்துவங்கள் இதற்குள் உள்ளன.

‘கலக்கம் தீர்த்த கலிலேயர்’ இயேசுவின் இறப்பின் பின்னர் சீடர்கள் தூய ஆவியானவர் அருளைப் பெற்றதன் பின்னர் துணிவோடு போதனை செய்த வரலாறு விளக்கப்படுகின்றது

‘அமலன் காட்டிய வழி’ சட்டவல்லுனன் ஒருவனின் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு நல்ல சமாரியன் உவமையை அடிப்படையாகக் கொண்ட நாடகம். பாடலும் உரையுமாக அன்பு என்பதற்கான இலக்கணத்தினை விபரித்து சட்டவல்லுனன் இயேசுவை “நான் முடிவில்லாத வாழ்வுபெற என்ன செய்ய வேண்டும்” என்ற அவன் கேள்வியில் இருந்து ஆரம்பித்து இயேசு சொன்ன நல்ல சமாரியன் உவமை நாடகமாகின்றது. இதற்கிடையில் முரணை தூண்டும் பாத்திரங்களாக இயேசுவின் போதனையைக் கேட்கின்ற கற்பனைப் பாத்திரங்களாகிய ஒருவன் மற்றவன் ஆகிய பாத்திரங்களினூடாகக் கதையில் சுவாரசியத்தினை ஏற்படுத்துவது சிறப்பினைத் தருகின்றது

‘ஒருதுளி’ விவிலியத்திலுள்ள ஏழை லாசரின் கதையை அடிப்படையாகக் கொண்ட நாடகமாகும். அடிப்படையில் ‘லாசர்’ ‘சீமோன்’ என்ற பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு நாடகம் எழுதப்பட்டிருந்தாலும் எலியேசர், எபநேசர் என்ற இரண்டு சீமோனின் நண்பர்களுக்கூடாக முரணையும் நாடகமயப்பாட்டினை உருவாக்கி இருப்பதுடன் இறுதியில் சாவு, வானதூதர் என்ற கற்பனைப் பாத்திரங்களினூடாக நாடகச் செய்தியை அழகுற விளக்குகின்றார்.

**நாடகவாக்கமுறைமை**

மரியசேவியர் அடிகளின் நாடகவாக்க முறைமையை இப்பத்து நாடகங்களினூடாகவும் நோக்குகின்றபோது பல்வேறு தனித்துவங்கள் அவற்றில் காணப்படுகின்றன. அவற்றினை சுருக்கமாக நோக்கலாம்.

◆ விவிலியக் கதைப்பொருள் அடிப்படையானதாக இருப்பினும் கதைப்பொருளில் மாற்றம் செய்யாது கற்பனையான பாத்திரங்களினூடாக முரண்பாடுகளை உருவாக்கி நாடகமயப்படுத்தி கதைகளை சொல்லியிருக்கின்றார்.

◆ பாடல்களையும் உரையையும் கதை சொல்லும் உத்தியாக பல நாடகங்களில் பயன்படுத்தியுள்ளார். அவை கருப் பொருள் விளக்கத்திற்கும் அளிக்கை நிலைச் சிறப்புக்கும் காரணமாக அமையப்பெற்றுள்ளன.

◆ கதைப்பின்னலை ஆக்கும்போது தொடக்கம் வளர்ச்சி- சிக்கல் -உச்சம் -முடிவு என்ற மேற்கத்தைய நாடக நுட்பத்துக்குப் பொருந்தும் வகையில் வடிவமைத்தமைக் கூடாக மேடையேற்றத்தக்க ஆற்றுகைச் சாத்தியப்பாடுகளுடன் நாடகங்கள் ஆக்கப்பட்டுள்ளன

◆ அக்காலத்தில் சிறப்புற்றிருந்த தி.மு. கவினரின் அடுக்குச் சொல்லாடலின் சாயலிலான மொழியாட்சி நாடகங்கள் எல்லாவற்றுக்கும் சிறப்புச்சேர்க்கின்றன. எதுகை மோனையுடன் அவற்றை கையாளவது நடிப்புக்கும் சிறப்பான அம்சமாகும் எடுத்துக்காட்டாக இத்தகைய மொழிப் பாவனையானது கத்தோலிக்க இலக்கியங்களிற்குப் புதிது உதாரணமாக

**ஏரோது :** *தூண்டில் கயிற்றில் அகப்பட்டுத் துள்ளுகின்றன துடிதுடிக்கும் மீன்கள் வலைக்குள் வந்து சிக்கிவிட்டன. வனப்புறு மான்கள் வீட்டிலே உள்ள கூட் டிலே வந்து விழுந்து விட்டன. பறவை இனங்கள்,*
*அந்தக் கூட்டமெல்லாம் எமன் கோட்டையைக் காணத்தீட்டுகிறேன் தீராத திட்டங்கள்..*

*வீசட்டும் வாள்- பறக்கட்டும் சிரசு*
*-சிதறட்டும் இரத்தம் -கதறட்டும் நாடு -*
*அலறட்டும் வீடு - அறியட்டும் ஏடு - சிரிக்கட்டும் சிங்காரச்செல்வன்..*

◆ பாடல்களே இல்லாத நாடகங்கள் இல்லை என்று கூறுமளவுக்கு எல்லா நாடகங்களிலும் பாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதிலும் பாடல்கள் தமிழ் மரபு வழி யாப்புக்கமைய, விருத்தம், வெண்பா சிந்து, கீர்த்தனை போன்ற வடிவங்களிலும் மரபு ரீதியான பாடல் மெட்டுகளிலும் ஆக்கப்பட்டுள்ளன. உதாரணமாக கவலையின் எல்லை நாடகத்தில் யோபுவின் குழப்பத்தினையும், தெளிந்த மனதினையும் காட்டுவதற்கு இந்து சமய ‘திருப்புகழ்’ பாடல் மெட்டில் ஒவ்வொரு சோதனைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. மரியசேவியர் அடிகளின் கவித்துவத்திற்கு அடையாளமாக அவை இருப்பதும் குறிப்பிடத்தக்கது..

உள்ளத்தொரு இல்லத்தமரிடு
எல்லைப்படி சொல்லப் புகழுறு
இல்லைத் துயர் இன்பத்தொளிசுடர் –
இறைவீடு
பிள்ளைக்கொரு தந்தைக் குறவு நல்
அன்புக்குயர் வெள்ளத் தருள் வளர்
மெள்ளச்சுவை அள்ளித்தரும் –
அமுதே உன்

◆ திருவிவிலியத்திலே வருகின்ற கருத்துக்களைக்கூறும்போதும் அந்த மொழியை எல்லா இடங்களிலும் அப்படியே பயன்படுத்தாது நாடகத் தமிழ் மிளிர மொழி மாற்றம் செய்துள்ளார். உதாரணமாக கவலையின் எல்லை நாடகத்தில் யோபு ஆகமத்தில் கடவுள் யோபுவுடன் பேசிய வார்த்தைகள் நாடகத்தில் மிகவும் சிறப்பாகக் கையாளப்படுகின்றன.

*“நான் பூமிக்கு அடிக்கல்லு நாட்டும் போது நீ எங்கிருந்தாய் ? அதன் அளவைக் குறித்தவேளை, அதன் வடிவைப் பொதிந்த வேளை நீ எங்கிருந்தாய் ? விண்ணிலே கண்சிமிட்டும் எண்ணற்ற் தாரகைகள் என்னை ஏற்றிப் போற்றியபோது நீ எங்கே இருந்தாய்..”*

தொகுத்து நோக்கும் போது கிறிஸ்தவ நாடகவரலாற்றில் தமிழ்மயப்படுத்தப்பட்ட, அரங்க நுணுக்கங்களை நன்கு விளங்கிக்கொண்ட, நவீன நாடகப் போக்கினை உள்வாங்கிக்கொண்ட சிறப்பான நாடகங்களை மரியசேவியர் அடிகளே முதன்முதலாக எழுதியுள்ளார் என்பது இப்பத்து நாடகங்களினூடாகவும் வெளிப்படுகின்றது. கிறிஸ்தவ நாடகங்களை மேடையேற்ற விரும்புபவர்களுக்கும், மரியசேவியரின் அரங்கியல் பணியினை ஆய்வு செய்பவர்களுக்கும் அறுபதுகளின் அரங்கப்போக்கினை அறிய முற்படுபவர்களுக்கும் இந்நூலானது பெரிதும் பயன்படும் என்று நம்பலாம்.

**காவலூர் யோவான்**

# 1ம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
14 . 12 . 1945

இறை அடியில்
11 . 07 . 2019

அமரர்
## அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதன்

திரு அவை தனின் குருச்சந்நிதானம்
பத்திநாதன் குடும்பத்தின் நறுமணச் சந்தனம்
நற்செய்தி பகன்ற நற்கோதுமை மணி
நற்பணிக் கடலில் பயணித்த படகு

சுனாமி கொந்தளித்தது அன்று
முல்லை மக்கள் பேரலைக்குள் மடிந்தனர்
வன்னிப் போர் வெடித்தது அன்று
வன்னி மக்கள் போரலைக்குள் துடித்தனர்

அத்தனை மக்களையும் படகு சுமந்தது
கண்ணீரில் கரையும் மக்களைத் தாங்கி
விசுவாசப் படகு
விடியலின் திசைமுகம் நோக்கி
ஆழம் நிறை கடலில்

அலை வந்து மோதியும்
ஆர்ப்பரிப்பின்றிப் பயணித்தது.

"தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட
மேலான அன்பு இல்லை"
இறை இயேசுவின் வார்த்தையை
வாழ்வாக்கும் வேகத்தில்
குண்டுச் சிதறல்களை உடலில் சுமந்தும்
முடங்கி விடவில்லை சேவையின் வீச்சு
அடங்கி விடவில்லை நீதியின் பேச்சு
ஒடுங்கி விடவில்லை உரிமையின் மூச்சு

நாற்பத்தொன்பது வருடம்
நன்மக்களை வாழ்வித்த சுவாசக் காற்று
ஓய்வெனக் கேட்டு யாழ். திரு அவையின்
வீட்டின் கதவைத் தட்டிய வேளை
ஆண்டவர் இயேசு
வான் வீட்டின் கதவை அகலத் திறந்தார்.

உத்தமமும் உண்மையுமான ஊழியனாய்
விண்ணகம் விரைவினும்
எம்முடன் நீரும்
உம்முடன் நாமும்
ஒன்றாகவே பயணிப்போம்
இறை பேரின்பம் நோக்கி........

AD 38

பிரிவால் துயர்காணும்
சகோதர-சகோதரிகள்
குடும்பத்தினர்

# விண்ணக வாழ்வில் 10வது ஆண்டு



தாய் மடியில்
20 . 05 . 1925

இறை அடியில்
17 . 07 . 2010

AD 37

அமரர்
## திருமதி. ஆகத்தம்மா அன்ரனி பெர்னாண்டோ


விண்ணக வாழ்வில்
இன்பம் காணும் எம் அன்னையே!
மண்ணக வாழ்வில்
எம் நெஞ்சங்களில் பதித்துச் சென்ற
உந்தன் இறை விசுவாசம்
உந்தன் நற்செயல்கள்
உந்தன் தாய்மை வாழ்வு
எந்தக் காலத்திலும்
அழியா வரம் பெற்றவை
என்றுமே உம்மைத் தாங்கி.....

859/19 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

பெர்னாண்டோ
குடும்பத்தினர்

# 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி

கருவாக
௨0 . ௦௨ . 1943



வித்தாக
19 . ௦7 . ௨௦19

அமரர்
## கபிரியேற்பிள்ளை மரியதாசன்

பாசமும் அறிவும் பண்பும்
தரணியில் எமை உயர்த்தியவரே!
மேதினியில் சிறப்புடனே வாழ – உம்மை
மெழுகாக உருக்கி எமை வாழவைத்தீர்

கள்ளமற்ற அன்பையும்
உதட்டோரம் உதிர்க்கும் உங்கள் புன்னகையையும்
காணாது வாடி நிற்கின்றோம் – தந்தையே
ஆண்டுகள் ஒன்று கடந்தாலும் ஆறவில்லை எம்துயர்

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு

(AD-39)

தகவல்
அருட்திரு. ம. அமலதாஸ் (மகன்)

# விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு



தாய் மடியில்
16 . 12 . 1924

இறை அடியில்
10 . 06 . 2020

AD 36

அமரர்
## திரு. இறமேந்து தேவசகாயம் (ஓய்வு நிலை அதிபர்)

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும்" (தி.பா. 27:4)
அன்பான இறைவா!
இவ் உலகிலிருந்து உம்மிடம் அழைத்துக் கொண்ட
உமது அடியான் அமரர் இறமேந்து தேவசகாயம்
அவர்களை உமது நித்திய வான் வீட்டில் சேர்த்தருள
வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம்.
ஆமென்.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


## குறைந்த கட்டணத்தில் பாதுகாவலன் மண்டபம்

- திருமண விழா
- பூப்புனித நீராட்டு விழா
- பிறந்ததின விழா
- கலந்துரையாடல்கள்
- கூட்டங்கள்
- இறந்தோர் நினைவுச்சடங்கு

நவீன வசதிகளுடனான
உணவு அறை
சிறந்த அலங்கரிப்புக்கள்

உங்கள் இல்லத்தில்
நடைபெறும் சகலவிதமான
கொண்டாட்டங்களையும்
உங்கள் உறவுகளுடன்
கொண்டாடி மகிழ
இல.360, யாழ் பிரதான வீதியில்
அமைந்துள்ள
**பாதுகாவலன் மண்டபத்தை**
நாடுங்கள்.


# விண்ணக வாழ்வின் 45வது நாள் நினைவு

மண்ணில்
19 . 09 . 1957



விண்ணில்
15 . 05 . 2020

அமரர்
## அந்தோனி கொஸ்மாம்பிள்ளை (யோகம்)

மண்ணக வாழ்விலும் உம்மை அன்பு செய்தோம்
விண்ணக வாழ்விலும் உம்மை அன்பு செய்வோம்
ஓ மரணமே! உன் நினைவுகள் இனிமையானவை
நீதியில் வாழும் மனிதனுக்கு மரணத்தின் பயமே இல்லையே...

விண்ணகமே எமது தாய்நாடு அதை நோக்கியே நாம் பயணிக்கிறோம். இப்பயணத்தில் விண்ணகத்தை நோக்கி விரைவாகப் பறந்த கொஸ்மாம்பிள்ளையின் ஆன்மா நித்தியமாட்சியில் அமைதியை அனுபவிப்பதாக.

எவுசேனி இல்லம்,
தவசிகுளம்,
மிருசுவில்.

அன்புடன் நினைவுகூரும்
மனைவி, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

AD 29

# ஜூலை மாதத்தில் குடும்பங்களுக்காக மன்றாடுவோம்
## -திருத்தந்தை

இன்றைய குடும்பங்கள், அன்பு, மதிப்பு, மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றின் தோழமையைப் பெற்றிட இந்த ஜூலை மாதத்தில் சிறப்பாக மன்றாடுவோம் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் காணொளிச் செய்தி வழியாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜூலை மாதச் செபக் கருத்து பற்றிக் காணொளிச் செய்தியில் விபரித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வேகமாக மாறிவரும் இன்றைய உலகில், பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் இன்றைய குடும்பங்கள் பாதுகாக்கப் படவேண்டும் என்பதற்காகக் கடவுளை மன்றாடுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

வாழ்வில் தொடர்ந்து இடம்பெறு வரும் மாற்றங்களால் பெற்றோர், சிலவேளைகளில் தங்கள் பிள்ளைகளுடன் விளையாட மறந்துவிடுகின்றனர் என்றும், இத்தகைய இன்னல்களிலிருந்து குடும்பங்கள் மீள்வதற்குரிய வழிகளைக் காண, திருஅவை குடும்பங்களுக்கு உதவவேண்டும் என்றும் இச்செய்தியில் தெரிவித்துள்ளார்,

பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் குடும்பங்கள், அவற்றை மேற்கொள்வதற்கு, குடும்பங்களின் அருகாமையில் இருந்து, திரு அவை அவற்றை ஊக்குவிக்கவேண்டும் என்றும் திருத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்றைய குடும்பங்கள் அன்பு, மதிப்பு, மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றின் தோழமையை குறிப்பாக அரசிடமிருந்து அவை பாதுகாப்பைப் பெற்றிடவேண்டும் என்று, இந்த ஜூலை மாதத்தில் சிறப்பாக மன்றாடுவோம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்தக் காணொளிச் செய்தி வழியாக அழைப்பு விடுத்துள்ளார்.

இன்றைய மனித சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களோடு தொடர்புடைய கருத்துக்களுக்காக ஒவ்வொரு மாதமும், திருத்தந்தை செபக் கருத்து ஒன்றை வெளியிட்டு, அக்கருத்துக்காகச் செபிக்குமாறு, உலகக் கத்தோலிக்கர் அனைவருக்கும் அழைப்பு விடுத்து வருகின்றனர்.

## மாண்புயர் வாழ்வு மாநிலத்தில் வாழ்ந்திட



ஆடித்திங்களைத் தனக்குள் அடக்கிய
திரு அவையின் ஓய்வு நிலை ஆயர் பெருந்தகையே!
அகவை நாளும் ஆடியன்றோ
ஆயர் அபிஷேகமும் ஆடியன்றோ
பெயர் கொண்ட புனிதர் தினமும் ஆடியன்றோ
யாழ். மறைமாவட்ட ஆயராய்
அடியெடுத்து வைத்ததும் ஆடியன்றோ
நாடி உம்மிடம் வருவோர்க்கு
கோடி நன்மைகள் பல செய்தும்
தேடி அடையும் திருச்செல்வம் பெற்று
மாண்புயர் வாழ்வு மாநிலத்தில் வாழ்ந்திட
இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்

# கிளரீசியன் சபைக்கு புதிய குருக்கள் இருவர்

இறைவன் திருவருளால் கிளரீசியன் சபையைச் (அமலமரியின் மறைபோதக மைந்தர்கள்) சேர்ந்த இரண்டு திருத்தொண்டர்கள் எதிர்வரும் 20ம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் பணிக்குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர். திருத்தொண்டர்களான யோ. டிலான் றோஜன் CMF. அ.ஜெ.றெஜினோல்ட் றொண்ஷன் CMF ஆகியோரே யாழ் ஆயர் பேரட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் பணிக்குருக்களாக அருட்பொழிவு செய்யப்படவுள்ளனர்.



**திருத்தொண்டர் து. டிலான் றோஜன்** CMF .பெரியவிளான் புனித அந்தோனியார் பங்குத் திரு அவையைச் சேர்ந்த இவர் திரு. திருமதி யோசப் எலிசபேத் தம்பதிகளின் நான்காவது மகனாவார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மானிப்பாய் புனித அன்னாள் றோ.க.த.க பாடசாலை, கல்மடுநகர் அ.த.க பாடசாலை, இளவாலை றோ.க. ஆண்கள் பாடசாலை என்பவற்றிலும், இடைநிலை மற்றும் உயர் கல்வியை இளவாலை புனித கென்றியரசர் கல்லூரியிலும் கற்றார். இறை அழைப்பிற்கு செவிசாய்த்து சிறிய குருமடக் கல்வியினை கட்டுவ புனித கிளாரட் சிறிய குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியினை யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் நிறைவு செய்த பின் தனது நவ சந்நியாசப் பயிற்சியினை பிலிப்பைன்ஸ் ஓர்மோர்க் புனித கிளாரட் நவசந்நியாச இல்லத்திலும் மேற்கொண்டார். தொடர்ந்து இறையியல் கற்கை நெறியினைக் கண்டி தேசிய குருமடத்தில் பூர்த்தி செய்து 2019-11-09 அன்று யாழ்ப்பாணம் சுண்டுக்குளி திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருத்தொண்டராக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

கொழும்பு மறைமாவட்டம். புதுக்கடை புனித செபஸ்தியார் ஆலயம், பதுளை மறைமாவட்டம் பல்லேகட்டுவ புனித யோசப்வாஸ் ஆலயம், யாழ் மறைமாவட்டம் மல்லாவி புனித செபஸ்தியார் ஆலயம் ஆகியவற்றில் தனது திருத்தொண்டர் பணியை ஆற்றிய இவர் முதல் நன்றித் திருப்பலியை 22-07-2020 புதன்கிழமை காலை 09.00 மணிக்கு பெரியவிளான் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.



**திருத்தொண்டர் அ.ஜெ.றெஜினோல்ட் றொண்ஷன்** CMF, மாதகல் புனித தோமையார் பங்குத் திரு அவையைச் சேர்ந்த இவர் திரு.திருமதி. அன்ரனி ஜெயரட்ணம் அமலோற்பவ பரிபூரணம் தம்பதியினரின் மூன்றாவது மகனாவார். இவர் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை யா/கலட்டி றோ.க ஆண்கள் பாடசாலை பருத்தித்துறை, மன்/தட்சணா மருதமடு அ.த.க பாடசாலையிலும், உயர்தரக் கல்வியினை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் நீர் கொழும்பு தோப்பு றோ.க.த.க. வித்தியாலத்திலும் நிறைவு செய்தார். இறை அழைப்பிற்கு செவிசாய்த்து சிறிய குருமடக் கல்வியினை யாழ் கிளாரட் அகத்திலும், கட்டுவ புனித கிளாரட் சிறிய குருமடத்திலும், மெய்யியல் கற்கை நெறியினை யாழ்ப்பாணம் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியிலும் நிறைவு செய்த பின் தனது நவசந்நியாச பயிற்சியினை பிலிப்பைன்ஸ் ஓர்மோர்க் புனித கிளாரட் நவசந்நியாச இல்லத்திலும் மேற்கொண்டார். தொடர்ந்து இறையியல் கற்கை நெறியினைக் கண்டி தேசிய குருமடத்தில் பூர்த்தி செய்து 2019-11-09 அன்று யாழ்ப்பாணம் சுண்டுக்குளி திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருத்தொண்டராக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மறைமாவட்டம் தேவகிராமம் அலிகம்பை புனித சவேரியார் ஆலயத்தில் திருத்தொண்டர் பணியை ஆற்றிய இவர் தனது முதல் நன்றித் திருப்பலியை 21.07.2020 செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கவுள்ளார்.

# நவாலியில் மடு அன்னையின் ஆடித்திருவிழா



மருதமடு அன்னையின் ஆடித்திருவிழா கடந்த 02.07.2020 அன்று நவாலி புனித பேதுருவானவர் ஆலயத்தில் கொண்டாடப் பட்டது. திருநாள் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். பங்குத்தந்தை அருட்பணி அலின் கருணாக ரனின் வழிநடத்தலில் நடைபெற்ற இத்திருவிழாவை பங்கின் மரியாயின் சேனையினரும், மாதா கூட்டத்தினரும் சிறப்பித்தனர். திருவிழாவில் கலந்து கொண்ட அருட்பணியா ளர்கள், மரியாயின் சேனையினர், மாதா கூட்ட அங்கத் தவர்களைப் படத்தில் காணலாம்.

# சிறந்த கலந்துரையாடல்களும் சுயமுயற்சிகளுமே இன்றைய காலத்தின் தேவை



கியூடெக் கரித்தாஸ் ஒருங்கிணைந்த மனித மேம்பாட்டுக் குடிமக்கள் கலந்துரையாடலும் சமூகங்களுக்கி டையிலான செயற்திட்டங்களும் யாழ் மணியந்தோட்டம், ஆனைக்கோட்டை, கொழும்புத்துறை, சோனகத்தெரு, உதயபுரம் போன்ற பகுதியில் சமூகக்குழுக்களுக்கிடையே நடைபெற்று வருகின்றது. இச்செயற்திட்டங்களை யாழ் கரித்தாஸ் கியூடெக் இயக்குனர் அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் கொழும்பு கரித்தாஸ் செடெக் தேசிய நிறுவன உத்தியோகத்தர்கள் வருகை தந்து குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடினர்.இங்கு இயக்குனர் அருட்தந்தை அவர்கள் தனது உரையில் எம்மக்கள் தமது முயற்சியால் முன்னேறும் ஆர்வத்துடன் சவால்களை வென்று சாதனை படைக்கும் சமூகக் கலந்துரையாடல்கள் மூலம் வலுப்படுத்தப்பட்டு வருகின்றார்கள் என்பதனை நேரில் காணும் முயற்சிகளே இவை. இதனை முன்னேற்ற என்றும் கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் துணைநிற்கும் என்றார். கொழும்பு செடெக் தேசிய நிலைய உத்தியோகத்தர் திரு.பெற்றடி அவர்கள் தமது குழுவினர் சார்பில் உரையாற்றுகையில் யாழ்மக்களின் விடாமுயற்சியைப் பாராட்டுகின்றோம். சுயதொழில் முயற்சியுடன் சமூகத் தேவைகளை இனங்கண்டு முன்னெடுப்பது ஏனைய பிரதேசங்களுக்கும் முன்மாதிரியாகவும், தன்நம்பிக்கை ஊட்டுவதாகவும் உள்ளது. இதனை மேம்படுத்துவதில் தான் சமூக ஒற்றுமையும், சுயமுயற்சிகளும் வலுவூட்டப்படும் என்பதனை சகலரது கலந்துரையாடலிலும் மகிழ்ச்சியான செயல்களைப் பாராட்டுகின்றேன் என்றார்.

# யாழ். கியூடெக் அனுசரணையில் சாட்டியில் முதியோர் ஒன்றுகூடல்



முதியோர் குழுவினருக்கான ஒன்றுகூடல் ஒன்று வைத்தியர் ஆனந்தி கமலநாதன் அவர்களின் சகோதரியின் அமரத்துவமான 45வது நாள் நினைவாக வேலணை சாட்டி ஆலய முன்றலில் 05.07.2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ்.கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

நாவாந்துறை, சாவற்கட்டு, முஸ்லிம் வீதி, அல்லைப்பிட்டி, சாட்டி பகுதியைச் சேர்ந்த 48 மூத்த உறுப்பினர்களுடன் கியூடெக் இயக்கு நரும், பணியாளர்களும் இணைந்து நடாத்தினர். வள வாளர்களாக ஜே. யஸ்ரின், யோசப்பாலா, சாட்டி பங்குத்தந்தை அருட்பணி லொஷிங்டன் அமதி.அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

# சின்னமடு ஆலய வருடாந்தத் திருவிழா

இம்மாதம் ஆடி 30ம் திகதி வியாழக்கிழமை பி.பகல் 4.30 மணிக்கு கொடியேற்றதுடன் ஆரம்பமாகி ஆவணி மாதம் 8ம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். ஆயர் பேரருட்கலாநிதி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக மக்கள் வழிபாட்டில் கலந்துக் கொள்ளுமாறு பங்குத்தந்தை அ. ஞானப்பிரகாசம் அடிகளார் கேட்டுக்கொண்டார்.



சகல கொண்டாட்டங்களுக்குமான உங்களின் புகைப்படம், பெயர்கள் பொறிக்கப்பட்ட அழகான வர்ண மெழுகுவர்த்திகளை கத்தோலிக்க அச்சகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு யூலை மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.